
www.tamilarangam.net

# சக்தி

TAMILSK KVINNETIDSSKRIFT




சக்தி 3.2 1994

P''RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR-
-SEINE ; FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறுவர்கள் மீது பாலியல் வதை.

பெண்கள் சிறுவர்கள் பொருளாதார அடிப்படையில் பாலியல் பலாத்காரத்திற்குட் படுத்தப் படுதல் என்பது ஆசிய நாடுகளில் புதியதல்ல.

இந் நாடுகளில் காணப்படும் வலுவற்ற சட்டதிட்டங்களும், ஊழல், மற்றும் திறந்த பொருளதாரக் கொள்கை இவற்றினால் மிகவும் மலிவான பிரயாண ஏனைய சேவைகள் என்பவற்றினால் பொருளாதார வளம் பொருந்திய நாடுகளிலிருந்து உல்லாசப் பிரயாணிகள் என்ற பெயரில் ஆசிய நாடுகளுக்கு பல ஐரோப்பிய/வட அமெரிக்கர்கள் செல்வதுடன் இந்நாடுகளில் தமக்கென ' பாலியல் சந்தைகளை'யும் ஏற்படுத்தி உள்ளார்கள்.

தாய்லாந்தும், பிலிப்பைன்ஸ்சும் ஆசியாவில் மிகப் பிரபல்யாமான ' உல்லாசப் பயண' நாடுகளாக நீண்ட காலமாக இருந்து வந்தன. தற்போது மிக வேகமாகப் பரவி வரும் HIV / AIDS காரணமாக புதிய சந்தைகளை நோக்கி பயணத்தை மேற்கொள்ள வைத்துள்ளது.

இந்து சமுத்திரத்தில் இலங்குகின்ற முத்தாக ஒரு காலத்திலும், இந்து சமுத்திரத்தின் கண்ணீர் துளியாக தற்போது வர்ணிக்கப்படும் இலங்கைத் தீவும் நீண்ட காலமாக பொருளாதார வளம் படைத்தவர்களின் சொர்க்கமாக இருந்து வந்த போதிலும் தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் உடன் போட்டிபோடும் நிலை காணப்படவில்லை.

ஆனால் தற்போது சுகாதாரக் காரணிகளாலும், AIDS எனப்படும் பயங்கர வியாதியின் பீதியினாலும் ' உல்லாசப் பிரயாணிகள் ' இலங்கைக்கு பெருமளவில் செல்ல ஆரம்பித்து உள்ளனர்.

உல்லாசப்பயணிகள் என்ற பெயரில் இலங்கையின் இயற்கை வளங்களையும் காலநிலையையும், இயற்கை வனப்பையும் ரசித்து வருபவர்கள் மிகக் குறைந்தளவே என்று கூறலாம். பெரும்பாலனவர்களின் வருகை தமது பாலியல் வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்ளவே.

உல்லாசப் பிரயாணம் சாத்தியப் படுவது மத்தியதர, மேல்தட்டு வர்க்கங்களைச் சேர்ந்த ஆண்களுக்கே. காலம்காலமாக குடும்பம் என்ற வரையறைக்குள்ளும், சுற்றம், சூழலிலும் ஆண்களால் நிகழ்த்தப்பட்ட சிறுவர், பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் இன்று சமூக அரங்கில் மிகவும் கூடுதலாக விவாதிக்கப்படும் விடயமாக உள்ளது யாவரும் அறிந்ததே.

இங்குள்ள சிறுவர் நலன்பேணும் ஸ்தாபனங்களும், பெண்கள் அமைப்புக்களும் அதிக கவனம் செலுத்துவதனாலும் இங்கு இவர்களுக்கு பாலியல் வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்வது சற்று சிரமமாகவே உள்ளமையும் ஆசிய நாடுகளுக்கு இவர்களின் வருகைக்கு ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காரணமாகும்.

இலங்கையில் கிட்டத்தட்ட 2000 சிறுவர்கள் பாலியல் வதைக்குள் சிக்கிக் கொள்கிறார்கள் என பொலிசார் கூறுகின்றனர். இவர்களில் பெரும்பாலோனர் 14- 16 வயது ஆண் சிறுவர்களாகும்.

உல்லாசப் பிரயாணத்துறை இலங்கைக்கு வருவாயைத் தேடித்தரும் துறைகளில் ஒன்றாகும். சிறுவர்களை வைத்து பாலியல் வக்கிரப்படங்கள் மிகப் பெருமளவு தயாரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை எந்த வெளிநாட்டவரும் சிறுவர்களை பாலியல் வதைக்கு உட்படுத்தினார் என்ற குற்றச் சாட்டின் கீழ் கைது செய்யப்படவில்லை ஆனால் ஒருசிலர் குற்றப்பணம் செலுத்தப் பணிக்கப்பட்டதோடு நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சுவீடன் பொலிசாரால் 1992 யூன் மாதம் தனியார் வீடொன்றில் 300 மணிநேர பாலியல் வக்கிர வீடியோக்கள் கைப்பற்றப் பட்டுள்ளன. பெரும்பாலானவை இலங்கையில் படமாக்கப் பட்டுள்ளன.

சிறுவர்கள் பாலியல் வதைக்கு உட்படுத்தப் படுவதை எதிர்த்து பல சார்பற்ற அமைப்புக்கள் பணிகளில் ஈடுபடுவதோடு சட்ட கோவைகளிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப் போவதாக கூறப்படுகிறது.

**யமுனா.**

## பிறப்பு எங்கே ?

சிப்பியிலே நல்முத்து
பிறப்பது போலவும்
சேற்றிலே செந்தாமரை
மலர்வது போலவும்
சோகத்திலிருந்து
காவியம் பிறக்கிறது என்று
எங்கோ எப்போதோ
படித்தேன்.
இது பச்சைப் பொய்.

புண்ணிலிருந்து சீழ்
வடியுமே தவிர
தேன் சிந்தாது.
வேதனையிலிருந்து
விம்மல் பிறக்குமே தவிர
சிரிப்பு முகிழ்க்காது.
வறுமையிலிருந்து வெறுப்பு
ஊறுமே தவிர
அன்பு கனியாது.

கவிஞனை உயிரோடு
கல்லறைக்கு அனுப்ப
எண்ணுபவர்கள் தாம்
இப்படி
வாய்ப்பந்தல் போடுவார்கள்.

**பாப்லோ நெரூடா.**

□□ □□□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"SOMETHING LIKE A WAR"

stillfoto

# SOME THING LIKE A WAR.

மேகலா.

www.tamilarangam.net

குழந்தைகளின் அழுகை ஒலியுடன் ஆரம்பிக்கும் SOME THING LIKE A WAR விவரணப்படம் இந்தியாவின் மாநிலங்களில் ஒன்றான ராஜஸ்தானில் படமாக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் சனத்தொகையை கட்டுப்படுத்துவதற்கு கட்டாய குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டம் அமுலாக்கப் படுவதோடு இத்திட்டத் திற்கு இந்தியஅரச அதிகளவு நிதி ஒதுக்கீடும் வழங்கியுள்ளது.

அத்தோடு இந்தியாவின் சனத் தொகைப் பெருக்கம் பற்றி ' அதி சிரத்தை ' கொண்ட முதலாளித்துவ நாடுகள் நிதிஉதவி, மருத்துவஉதவி, புதிய குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் முதலியவற்றை வழங்கியதுடன் தமது புதிய கண்டு பிடிப்புக்களை பாவித்து அதன் நன்மை தீமைகளை அவதானிக்கவும் பெண்களை பயன்படுத்தியுள்ளார்கள் என்பதையும் இவ்விரணப் படம் நன்கு சுட்டிக் காட்டுகிறது.

சஞ்சய்காந்தியின் புதிய இந்தியாவை நிர்மாணிப்போம், மரங்கள் நாட்டுவோம், நகரங்களை சுத்தமாக வைத்திருப்போம் போன்ற கோரிக்கைகளுடன் நாமிருவர், நமக்கிருவர் என்ற கோரிக்கையும் ஒன்றாக அமைந்திருந்தது.

அரசின் குடும்பக்கட்டுப் பாட்டுத்திட்டம் வறுமையான மக்களை பெருமளவில் நெரித்துள்ளது.

ஆண்களும் எண்ணிக்கையில் அடங்கா பெண்களும் குழந்தைகள் உருவாவதைத் தடுக்கும் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்கள்.

அரசஊழியர்கள் இயந்திர துப்பாக்கி, கண்ணீர்ப்புகைக் குண்டுகள் சகிதம் ட்ரக்குகளில் கிராமங்களுக்குச் சென்று ஆண்களைச் அடித்துத் துன்புறுத்தி ட்ரக்குகளில் ஏற்றி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று பின்பு சந்ததி உருவாகுவதை அழிக்கும் கட்டாய சத்திர சிகிசைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

**இந்தியாவின் 1977 அவசரகால ஆட்சியில் 6.5 மில்லியன் ஆண்கள் மலடாக்கப்பட்டுள்ளனர்.**

சந்ததி உண்டாவதை தடுக்கும் சத்திர சிகிச்சையின் பிரயோகம் இந்திராகாந்தியின் தேர்தலில் சற்று சரிவை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து குடும்பக்கட்டுப் பாட்டத்திட்டம் பெண்களை நோக்கி திருப்பப் பட்டது.

1985-- 1990 ஆண்டு பகுதியில் குடும்பக் கட்டுப்பாட்டு இலக்கு வருமாறு.

31 மில்லியன் -- மலடாக்குதல்
25மில்லியன் -- கர்ப்பத்தடை
14.5 மில்லியன் --ஏனைய கருத்தடைமுறைகள்

அரச உத்தியோகத்தவர்கள் கிராமங்களுக்குச் சென்று ஒலி பெருக்கி மூலம் " நாம் உங்கள் பிரச்சனைகளை

www.tamilarangam.net

தீர்த்து வைக்கிறோம் " என மக்களுக்கு போலி உறுதி மொழிகளை வழங்கி அவர்களை சத்திர சிகிச்சைக்கு சம்மதிக்க செய்கின்றனர்.

சத்திர சிகிச்சை முடிவடைந்தவுடன் மிகச் சிறிய தொகை பணம் வழங்கப் படுகிறது.

அதன் பின் அவர்களுக்கு சத்திரசிகிச்சை மூலம் ஏற்படும் உபாதைகள் பற்றியோ ஏனைய விளைவுகள் பற்றியோ எந்தவித கவனமும் எடுக்கப் படுவதில்லை.

சத்திர சிகிச்சைக்குப் பெண்களைச் சேகரிப்பதில் தனியார் முகவர்களும் ஈடுபட்டுள்ளார்கள்.

விவரணக்காட்சியில் ' case ' என்ற சொல்லுப் பயன்படுத்தப் படுகிறது. 'case' சேகரித்துச் செல்லும் முகவருக்கு உதாரணமாக 5 ' case ' சேகரித்துச் சென்றால் tv set , அல்லது அதற்கு ஈடான பொருட்கள் வழங்கப் படுகிறது. இவர்களும் பல பொய் பிரட்டுக்களைச் சொல்லியே பெண்களைச் சம்மதிக்கச் செய்கின்றனர்.

ஒவ்வொரு பிராந்தியத்திலும் 6--7 முகவர்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. கிராமத்தலைவர்கள், சுகாதாரப் பிரிவினர் போன்ற பிரிவினரும் இந்த முகவர்களுள் அடங்குவர்.

சத்திரசிகிச்சையின் போது அரசின் நோக்கமான குழந்தைகளின் எண்ணிக்கை குறைப்பே முதன்மை பெறுகிறது.

பெண்களின் உடல்நிலை பற்றியோ, சத்திரசிகிச்சையை தாங்கும் / ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு பெண்ணின் உடல் தயாராக உள்ளதா என்பது பற்றியோ சத்திர சிகிச்சையின் பின் விளைவுகளான மேலதிக இரத்தப் போக்கு, வயிற்று வலி, இடுப்புவலி எவையும் கருத்துக் எடுத்துக் கொள்ளப்படாததோடு சத்திர சிகிச்சையின் பின் பெண் உயிருடன் இருக்கிறாளா இறந்து விட்டாளா என்பதை கூட கவனிப்படுவதில்லை என சத்திர சிகிச்சை மூலம் கஸ்டங்களை அநுபவித்த பெண்கள் கூறுகின்றனர்.

கருத்தடைமுறைகள் , சத்திரசிகிச்சை முறை என்பவற்றோடு NORDPLANT எனப்படும் பரீட்சார்த்த முறையும் பரிசீலிக்கப்படுகிறது.

( Finland தயாரிப்பான NORDPLANT கூட்டுக் குளிசை வடிவானது. கையில் சத்திரசிகிச்சை மூலம் பொருத்தப்படுகிறது) இம்முறை பரீட்சாத்தகரமாக பரிசீலிக்கப் படுகிறது என்பது கூட பெண்களுக்கு கூறப்படாமல் பாவிக்கப்பட்டுள்ளது.

NORDPLANT இன் பக்க/பின் விளைவுகளாக மேலதிக இரத்தப் போக்கு, 28 நாட்களுக்குள் இரண்டு தடவைகளுக்கு மேற்பட்டதான இரத்தப் போக்கு , கண்களின் வெண்படலம் நிறம் மாறுதல், தலையிடி, குமட்டல் போன்றவைகள் ஏற்பட்டுள்ளன.

www.tamilarangam.net

NORDPLANT முறையை அறிமுகப்படுத்திய / உடலினுள் செலுத்திய வைத்தியரிடம் அதனை அகற்ற விரும்புவதாகக் கூறியும் வைத்தியர்கள் அகற்ற மறுத்ததைத் தொடர்ந்து தனியார் வைத்திய நிலையங்களில் அகற்ற சத்திரசிகிச்சையை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டதையும் பெண்கள் விபரிக்கிறார்கள்.

NORD PLANT இந்தியாவில் 3500 பெண்களுக்கு பாவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் சனத்தொகையை குறைப்பதற்கு பல வெளிநாடுகள் நிதி உதவிகளை வழங்குவதில் மிகுந்த அக்கறை காட்டுகின்றன.

மொத்தத்தில் வறுமையைக் கொல்வ தற்கு எந்த முயற்சிகளையும் மேற் கொள்ளாத அரசு பதிலாக வறிய மக்களையே கொல்கிறது.

இவ்விவரணப்படத்தினை தயாரிப்பதற்கு ஒத்துழைப்பினையும், பெண்களை ஒன்று கூட்டி பிரச்சனை களை மனம் திறந்து பெண்கள் தங்களுக்குள் கலந்துரையாடி பிரச்சனையின் முக்கியத்துவத்தையும் கனத்தையும் வெளிக் கொணர முயன்ற அனைவரது முயற்சிகளும் பாராடப்பட வேண்டியவை.

□ □ □ □ □

**1993** ஆம் ஆண்டின் இலக்கியத்திற்கான நோபல் பரிசை அமெரிக்க கறுப்பினத்தைச் சேர்ந்த Toni Morrison பெற்றுள்ளார்.

சாதரண தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்த இவர் தனது நாவல்கள் மூலம் அமெரிக்க சிறுபான்மைக் கறுப்பின மக்களின் வரலாற்றினைக் கூற முனைகிறார்.

அவர் தனது முதலாவது நாவலான The bluest eye ( 1969) இல் வெள்ளை நிறமும் நீலக் கண்களும் மதிப்புக்கும் அழகிற்கும் உரியவை என கருதப்படு சமூகத்தில் கறுப்பினக் குழந்தை அந்நியப்படுத்தப்படுவதைக் கூறுகின்றார். இந்நாவல் பல விவாதங்களையும் சர்ச்சைகளையும் ஏற்படுத்தியது.

அவரது இன்னொரு நாவலான Beloved மகள் மீது அளவு கடந்த பிரியம் வைத்திருக்கும் தாய் தன்மகள் அடிமையாகிவிடக் கூடாது என்பதற்காக மகளைக் கொலை செய்வதைக் கூறுகிறது. இந்நாவல் 1987 இல் pulitzer prize இனைப் பெற்றது.

Toni Morrison கறுப்பின பெண்களின் ' தலைவிதி ' பற்றியும் அமெரிக்காவின் சிறுபான்மை கறுப்பினமக்களின் நிலை பற்றியும் தனக்கே உரித்தான பாணியிலும் கவிநயம் வாய்ந்த மொழிநடையிலும் மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் கருத்துக்கள்.

அன்புடன் சக்தி தோழர்களுக்கு தோழமையுடன் !

வணக்கம். உங்கள் சக்தி இதழ் 3 : 1 வாசித்தேன். முன்னையதை விட தரமாக உள்ளது. ஆனால் வரிக்கு வரி எழுத்துப் பிழைகள்தான் கூட.

உதாரணமாக வாசகர் பக்கத்தில் அச்சுப்பதிவு முன்னைய இதழ்களைவிட என்பதற்குப் பதிலாக இதற்களை என்று இருக்கிறது. சக்தி தோழர்களை கூடிய கவனம் எடுக்க கோருகிறேன்.

அத்துடன் சக்தியின் வடிவமைப்பில் பல மாற்றங்கள் செய்யப் படல் வேண்டும். சின்னப் பந்திகள் பக்க இடைவெளி போன்றவைகள் ஆக்கங்கள் குறைவானாலும் பக்கத்தைக் குறைத்து வடிவமைப்பை மாற்றலாம் தானே.

அடுத்து 'சமரின் விமர்சனத்திற்கான பதில் ' அகல்யாவினது பதில் நன்றாக இருந்தது. விமர்சனப் பாங்காகவும் அதே நேரத்தில் விவாதமாகவும் இருக்கிறது.

பெண்விடுதலையில் அக்கறையுடைய வர்கள் என்ற வகையில் அகல்யா சமருக்கு நல்ல பதில் கொடுத்திருக்கிறார். அதை நானும் வரவேற்கிறேன்.

தோழமையுடன்
றஞ்சினி ( சுவீஸ் )

அன்புடையீர்,

சக்தி 3:1 இல் 'அத்துமீறல்கள் ' கதை நிஜமான பலபிரச்சனைகளைத் தொடுகிறது. ஆயினும் முன்னம் ஒரு தடவை சக்தியில் வெளிவந்த சில ஐயப்பாடான கருத்துகள் மீளவும் இக் கதையில் கூறப்பட்டுள்ளன.

பெண்களின் வெற்றுடம்பு மட்டுமின்றி ஆண்களின் வெற்றுடம்பும் கலைஞர்களாற் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. பழம் கிரேக்க - ரோமன் சிற்பக் கலையில் இதை மிகுதியாகக் காணலாம்.

இந்தியத் துணைக் கண்டத்தின் தென் பகுதியில் எப்போது பெண்கள் மார்பை மறைத்தல் அவர்களது ஆடை அலங்காரத்தின் அவசியமான பகுதியாயிற்று என்று தெரியாது. இன்னமும் மூன்றாம் உலகநாடுகளில் உள்ள பல சமுதாயத்தினர் மத்தியில் மார்பை மூடுவது அவசியமாகக் கொள்ளப்படுவதில்லை.

இந்திய சிற்பமரபிலும் தெய்வங்களதும், மானுடர்- மானுடர அல்லாதோரதும் சிற்பங்களிலும் ஆணும், பெண்ணும் பெரும்பாலும் வெற்றுடம்பினராகப் பாலுறுப்பை மட்டுமே பொதுவாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறைத்துக் காட்டப் படுகின்றனர்.

அஜந்தா, சீகிரிய ஓவியங்களும் அன்றைய கால சமூக வழக்கையே பிரதிபலிப்பன. சமகாலத்து சமுதாய நெறிகளையும் விழுமியங்களையும் அக்காலத்திற்கு உரியனவாக நீடிப்பது சாத்தியமில்லை. எவ்வாறாயினும் பெண்கள் ஆண்களுக்குக் கீழ்ப்பட்டோராயும் ஆண்களது நுகர்வுக்கு உரியோர்களாயுமே கருதப்பட்டு வந்தமை அன்றும் இன்றும் மெய்யே.

இன்று முதலாளித்துவத்தின் கீழ் பெண் ஒரு விற்பனை பண்டமாக மாற்றப்பட்டு வருவது அருவருக்கத்தக்க உண்மை.

கோவிற் சிற்பங்கள் ஆண்களுடையனவாயினும் பெண்களுடையனவாயினும் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலத்திற்கும் கலாச்சாரத்திற்கும் உரியவை. அக் காலத்தின் அழகியற் கோட்பாடுகளுக்கு அமையவே சிற்பங்கள் அமைந்தன. இந்தியச் சிற்பத்தை விட கிரேக்க - ரோமன் சிற்பமுறை மனித உடலை அதிகம் யதார்த்தமாக காட்ட முனைந் துள்ளது. அங்கு கூட கட்டான உடலுள்ள மனிதர்களே கலைப் பொருளாகின்றனர்.

' சமர் ' கட்டுரை, ஆணாதிக்கத்தின் சிந்தனை எவ்வளவுதாரம் நம் சமுதாயத்தில் வேரோடியுள்ளது என்பதை உணர்ந்து எழுதப்பட்டுள்ளதோ தெரியவில்லை.

ஒழுக்கம், சமுதாய விழுமியங்கள் என்பன பற்றிய நிரந்தர விதிகள் இல்லை. இற்றைவரை இருந்து வருவன ஆணாதிக்கத்தின் நலன் பேணுபவையே. அதை எதிர்க்கும் போக்கில் எழும் பெண்ணுரிமைவாத நிலைப்பாடுகள் எல்லாமே சரியானவையாக இருக்க அவசியமில்லை.

சமுதாய நடைமுறை மூலமே சரி பிழைகள் நிர்ணயம் ஆகின்றன. தனிமனித ஒழுக்கத்தை நாம் சமுதாயச்சூழலிலும் குறிப்பான நிலவரங்களிலும் வைத்தே மதிப்பிட முடியும்.

மாக்ஸ் முதல் மா ஓ வரையிலானவர்களது தனிப்பட்ட ஒழுக்கம் பற்றிய கேள்விகள் மாக்சியத்தின் எதிரிகளால் விஷமத் தனமான முறையில் எழுப்பப்பட்டு வந்துள்ளன.

மனிதஇன விடுதலையைச் சாதிக்கும் புனிதர்கள் வருகைக்காக மனிதர் காத்திருப்பதில்லை. தனிமனித குறைபாடுகள் உள்ளவாறே இருக்க , மனிதர் சமுதாயஅமைப்பை மாற்ற வேண்டியுள்ளது. அடிப்படையான சமுதாய மாற்றமின்றி, நோய்ப்பட்ட ஒரு சமுதாய அமைப்பின் தனி மனிதரது ஒழுக்கத்தை முதன்மைப்படுத்துவது விஞ்ஞான சோசலிசமல்ல. மாக்ஸிசத்தை ஏதாவது சன்னியாசி

www.tamilarangam.net

மடத்திற்குரிய விதி முறைப்படி கடைப்பிடிப்பது சாத்தியமானதில்லை.

சமர் விமர்சனத்திற்குரிய அகல்யா எழுதிய பதிலில் எனக்குச் சில கருத்து வேறுபாடுகளுண்டு. அதனால் அகல்யாவை மாக்ஸிச விரோதி என்று நான் கூறிவிட முடியுமா ? எந்தவொரு மனிதரும் இயக்கமும் மாக்ஸியக் கட்சியொன்றுடனோ தம்மை மார்க்ஸிய வாதிகள் என்று கூறிக் கொள்ளும் தனி மனிதர் சிலருடனோ அல்லது மாக்ஸிய அணுகு முறையுடனோ ஏதோ சில விஷயங்களில் முரண்பட்டால் அவர்களை மார்க்ஸிய விரோதிகள் என்று இலகுவாக முத்திரை குத்திவிட முடியுமா ? முடியாது. ஒவ்வொரு மாக்ஸியக் குழுவும் தானே உண்மையான மார்க்சிசத்தைக் கடைப்பிடிப்பதாக கூறும் மார்க்ஸிய மதபிடமாக மாறும் நிலைமைதான் அதனால் உருவாகும்.

எதிரி யார், நண்பன் யார் என்று தெரிந்ததால் மாஓ வும் ஹோ சி மின்னும் பலமான எதிரிகளை முறியடிக்கும் பாதையை அறிந்தார்கள். மாக்ஸிசத்தை ஒரு வாய்ப்பாட்டு மட்டையாக்குகிற வர்களுக்கு இதெல்லாம் விளங்கியிருக்க அவசியமில்லை.

" சோசஸிசத்தால் தீர்க்கப்படக் கூடிய பெண்ணடிமைத்தனத்தின் வடிவங்களும் உண்டு. சோசலிசத்தால் மட்டுமே தீர்க்க முடியா வடிவங்களும் உண்டு " என்று அகல்யா சொல்கிறார். பெண்ணடி மைத்தனத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் தன் இலட்சியமாக்காத சோசலிஸசம் தன்பார்வையில் குறைபாடுடையது.

பெண்ணுரிமை எழுப்பும் புதிய கேள்விகளை உயிரோட்டமுள்ள சோசலிசம் தனது ஆளுமைக்குட் கொண்டு வர வேண்டும், கொண்டுவர முடியும். வெறுமனே அகல்யா போன்றோரது வாதங்களை ஒதுக்குவது தான் மாக்ஸிய விரோதமானது.

எனது கருத்து வேறுபாடுகள் எவ்வளவு தான் முக்கியமானவை யாயிருப்பினும் அகல்யாவின் நிலைப்பாட்டை மாக்ஸிய விரோதமானது என ஒதுக்க நான் ஆயத்தமாக இல்லை. அவர் எழுப்பும் வாதங்களில் மிகுந்த நியாயமுண்டு. அவற்றை மேலும் திருத்தமாக வளர்த்தெடுக்கும் பணியில் பெண்கள் கூடுதலாகப் பங்குபற்ற வேண்டும் என விரும்புகிறேன்.

அன்புடன்
சிவசேகரம்.

தோழமையுடன் சக்தி
தோழர்களுக்கு !!!

தற்போது ஐரோப்பாவில் புலம் பெயர்ந்த முற்போக்கு பிரிவினரிடையே நிகழ்ந்து வரும் கருக்கலைப்புரிமை பற்றிய விவாதங்களை சில ஐரோப்பிய சஞ்சிகைகளிலும் சரிநிகரிலும் வாசிக்க நேர்ந்தது.

இதுவரை வெளிவந்த விவாதங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனைத்தும் தம்மை மார்க்சிசக் கோட்பாட்டு அடிப்படையைக் கொண்டதாகக் காட்டிக் கொண்ட போதும் அவை எதுவும் மார்க்சிச அடிப்படையைக் கொண்டவையல்ல என்பதோடு கருக்கலைப்புரிமை பற்றிய விவாதமானது தவறான பாதையில் செல்வதையும் உணர முடிகிறது.

இதனடிப்படையில் கருக்கலைப்பு உரிமை பற்றிய விவாதத்தை நடத்தி வரும் சக்தியில் வெளிவந்த கட்டுரைகள் சம்பந்தமான சிறுவிமர்சனத்தையும், கருக்கலைப்புரிமை பற்றிய மார்க்சிச லெனினிச அடிப்படையிலான ஆய்வு ஒன்றினையும் அனுப்பி வைக்கிறோம்.

சமரின் கட்டுரை தொடர்பாக.

மார்க்சிசக் கண்ணோட்டத்தில் பார்ப்பதாக நினைத்துக் கொண்டும் தவறான புரிந்து கொள்ளலின் அடிப்படையில் அரைகுறையான தவறான மார்க்சிசப் புரிந்து கொள்ளலுடன் கருக்கலைப்புரிமை விவாதத்தை நடாத்துகிறது சமர்.

ஒரு நிகழ்வு சம்பந்தமாக அவசர அவசரமாக கருத்தைக் கூறிவிட்டு அதற்கு விவாதங்கள் பலதரப்பில் எழுந்ததும் கருத்திற்கு மார்க்சிச சாய பூச முனைந்ததுமே இதற்குக் காரணமாகும்.

உண்மையில் சமரின் கருத்துக்கள் எவையும் மார்க்சிச லெனினிச அடிப்படையிலானவையல்ல. கருத்துக்கள் யாவும் பூர்சுவா சிந்தனையின் அடிப்படையிலான கற்பனைகளே.

அதேவேளை சமர் கருக்கலைப்பு உரிமை பற்றிய விவாதத்திற்கு காரணாயிருந்தது என்பது இங்கு குறிப்பிட படவேண்டியது.

அடுத்து கருக்கலைப்பு உரிமை சம்பந்தமாக கருத்துக் கூற முற்பட்ட அகல்யாவினது சக்தியில் வெளிவந்த இரண்டு கட்டுரைகள் தொடர்பாக.

அகல்யா விவாதத்திற்காக முன்வைத்த கருத்துக்களுடன் நாம் உடன்பட்ட போதிலும் அவரது கருத்துக்கள் யாவும் முற்றுமுழுதான மார்க்சிச பார்வையையோ வர்க்க அடிப்படையையோ கொண்டவை அல்ல.

அகல்யாவினது முதலாவது கட்டுரையில்

சமரின் கண் மூடித்தமான விவாதத்தினைச் சரியாக அடையாளம் காணத் தவறியதுடன் அவ்விவாதத்தை மார்க்சிச லெனினிச அடிப்படையிலான விவாதம் எனக் கருதி சமரின் பாணியிலேயே அகல்யாவும் விவாதிக்க முற்பட்டு உள்ளதுடன் கருக்கலைப்பு உரிமை பற்றிய மலினப்படுத்திய விவாதத்தை முன் வைத்துள்ளார்.

தொடரின் இரண்டாவது பகுதியில்

சமரின் விவாதத்திற்கு பலியாகிப் போனதுடன் தன்னை ஆண் எதிர்ப்பு வாதியல்ல எனவும், மார்க்சிசவாதி எனவும் காட்ட முற்பட்டதுடன் கருக்கலைப்புரிமை சம்பந்தமான விவாதத்தை இரண்டாம் பட்சமானதாக பின்தள்ளியுள்ளார்.

இதற்குக் காரணம் சமரின் ஆணாதிக்க கருத்துக்களுக்கு பதில் சொல்ல முற்பட்டதும் , எமது சமூகத்தில் காலம் காலாக நிலவி வந்த ஆண் மேலாதிக்க தன்மையினால் பாதிக்கப்பட்ட கருத்துக்களை உயர்த்திப பிடிக்க முற்பட்டதும் எனலாம்.

அதே வேளை அகல்யா என்ற பெயரில் ஆண்களே கருத்துக் சொல்கிறா ர்களா என்ற சந்தேகமும் ஏற்படுவதுடன் இதற்கு சக்தி சஞ்சிகையும் துணை போகிறா என்ற சந்தேகமும் எழுகிறது.

இச் சந்தேகம் உண்மையானால் இது இன்று புலம் பெயர்ந்த நாடுகளிலும், இலங்கையிலும் தற்போது பெண்விடுதலை சம்பந்தமாக ஏற்பட்டுள்ள விழிப்புணர்வை மழுங்கடிக்க வைக்கும் செயற்பாடாகும்.

இவ்வாறு கூறுவதற்கான காரணம் யாதெனில் சக்தியில் வெளிவந்த சமர், அகல்யாவினது விவாதக் கட்டுரைகள் கருக்கலைப்புரிமை சம்பந்தமான விவாதத்தைத் தொடர விடாமல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தூண்டிலில் பிரசைகள் என்ற பெயரில் சில தமிழ் பூர்சுவாக்கள் நடத்திய தமிழ் தேசிய விடுதலை பற்றிய விவாதம் போல திசை திருப்பியதுடன் விவாதத்தை மார்க்சிச லெனினிச அடிப்படையில் நகர்த்த முடியா இயங்கா நிலையை அடைந்துள்ளது.

இத் தவறினைச் சீர் செய்யவும் மலினப்படுத்தப்படாத மார்க்சிச லெனினிச அடிப்படையில் கருக்கலைப்பு உரிமை சம்பந்தமான விவாதத்தை சரியான பார்வையில் மார்க்சிச லெனினிச ஆய்வு முறையில் ஆரம்பிக்க இக் கட்டுரை உதவும் என நம்புகிறோம்.

இக்கட்டுரை சமரினதும் அகல்யாவினதும் கட்டுரைகளுக்கான விமர்சனமோ அல்லது அதன் தொடரோ அல்ல என்பதையும் கூறிக் கொள்கிறோம்.

அத்தோடு இக்கட்டுரையை எழுதுவதற்கான காரணம்/ இவ்விவாதத்தைச் சொல்வதற்கான காரணம் எமது கருத்து மேலாதிக்கத்தை நிறுவிக் கொள்வதோ எம்மை தூய மார்க்சிச லெனினிச வாதிகள் எனக் காட்டிக் கொள்வதோ அல்ல இது கற்றலும் கற்பித்தலும் முரண்பாடுகளின் அடிப்படையிலான பிரச்சனைகளைக் கையாள்வதுமான பொருள்முதல்வாத தத்துவ முறைமையின் தளத்தில் இருந்தேயாகும்.

இக்கட்டுரைக்கான விமர்சனத்தை காழ்புணர்வின் அடிப்பபடையிலோ தவறான கொள்கை விளக்கங்களின் அடிப்படையிலோ முன் வைக்க வேண்டாம் என தோழமையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு
பெண்கள் அணி.
இலங்கை.

□□□□□□□□□□□□□□□□□□□

□□□□□□□□□□□□□□□□□□□□□

வாசகர்களுக்கு

வணக்கம்

பெண் எழுத்தாளர்களின்
எழுத்தார்வம் பற்றி
கேள்வி எழுப்ப வேண்டிய
காலகட்டத்தில் நாம்
இருக்கிறோமா என்ற
ஐயம் ஏற்பட்டுள்ளது.

□□□□□□□□□□□□□□□□□□□□□

இந்த தடவை சக்தியின்
தாமதமான வருகைக்கு
ஆக்கங்களின் பற்றாக்குறையே
காரணமாகும்.

□□□□□□□□□□□□□□□□□□□□□

நோர்வே பெண்களது
கருக்கலைப்புரிமை
போராட்டவரலாறு
இடப்பற்றாக்குறையினால்
இடம்பெறவில்லை.

□□□□□□□□□□□□□□□□□□□□□

www.tamilarangam.net

# கருக்கலைப்புரிமை

# பெண்கள் அணி.

முதலாளித்துவத்தின் ஆரம்ப வளர்ச்சி கால கட்டத்தில் மூலதனத்தின் நேரடி சுரண்டலானது உற்பத்தி சக்திகளாக இயங்கும் ஆண்கள் மீதானதே. இங்கு/இச்சந்தர்ப்பத்தில் பாட்டாளி வர்க்கம் என்பதற்கான விளக்கம் ஆண்தொழிலாளர்கள் என்பதே.

இந்நிலைமையில் பெண்கள் மீதான முதலாளித்துவத்தின் சுரண்டல் நேரடியானதல்ல. மேலும் முதலாளித்துவ சமூக அமைப்பில் பெண்கள் உற்பத்தி சக்திகளை மறுஉற்பத்தி செய்வதிலும் இயங்கு நிலையில் உள்ள உற்பத்தி சக்திகளை அதாவது வேலை செய்யும் நிலையிலுள்ள பாட்டாளிவர்க்க ஆண்களை பாராமரித்து மூலதன வளர்ச்சிக்கான முதலாளித்துவ சுரண்டலுக்கு ஆளாகின்றனர்.

முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கில் தொழிநுட்ப வளர்ச்சி விரிவுபடுத்தலுக்கு உள்ளாவதுடன் உற்பத்தி உறவுகள் விரிவு படுத்தப்படுகிறது.

விரிவுபடுத்தப்பட்ட உற்பத்தியை அதிகரிக்க பாரியளவு உற்பத்திசக்தி தேவைப்படுகிறது. உற்பத்தி சக்திகளின் பற்றாக் குறையை பூர்த்தி செய்வதற்கு பெண்கள் உற்பத்தி சந்தைக்கு வரவழைக்கப் படுகிறார்கள்.

இந்நிலையானது முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கில் முக்கிய கால கட்டமாகும்.

ஏனெனில்

முரண்பாடுகளை உள்ளடக்கிய முதலாளித்துவத்தில் முரண்பாடுகள் புதிய பரிமாணத்தை அடைகின்றன.

பெண்கள் நேரடியாக முதலாளித்துவத்தின் சுரண்டலுக்கு உள்ளாகின்றனர்.

பாட்டாளிவர்க்கம் என்ற வரைவிலக்கணம் நேரடிப் பார்வையில் விரிவடைகிறது. பாட்டாளிவர்க்கம் முழுமையடைகிறது.

முதலாளித்துவத்தின் மீது தாக்குதல் பன்முகப்படுத்தப்படுகிறது.

பெண்கள் சமூக, அரசியல் களத்திற்கு வருகின்றனர்.

பெண்கள் தமது உரிமைகளுக்காக முதலாளித்துவத்திற்கு எதிராக போராட அடித்தளம் இடப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட மாற்றங்களுக்கான அத்திவாரம் இடப்படுகிறது. இவ்வத்திவாரம் என்பது முதவாளித்துவத்தின் பெண்கள் பற்றிய முதன்மைப்படுத்தப்பட்ட இரு நலன்களான மறுஉற்பத்தி, உழைக்கும் சக்தி என்ற இரண்டையுமே பாதிக்கக் கூடியவை.

இதை உணர்ந்து கொள்ளும் முதலாளித்துவம் இரு நலன்களும் தேவை என்ற அடிப்படையில் நலன்களை

www.tamilarangam.net

முழுமையாகப் பாவிக்க முற்படுகையில் உழைக்கும் பெண்கள் இருவகையில் சுரண்டப்படுவதுடன் தம்மீது அழுத்தம் ஏற்படுவதையும் உணர்ந்து கொள்கின்றனர்.

பெண்கள் மீதான சுரண்டல் இருவகைப்படும்.
பாட்டாளிவர்க்கத்தில் ஒரு பகுதி என்றவகையில் முதலாளித்துவத்தின் நேரடியான சுரண்டல்.
பெண் என்ற அடிப்படையில் மறுஉற்பத்திசக்தியை தயார்ப் படுத்துதல், தரம் பேணுதல்.

இந்நிலையில் முரண்பாடுகளை தன்னகத்தே உள்ளடக்கிய முதலாளித்துவம் பெண்களை தமது உரிமைகளுக்கான போராட்டத்திற்கு ( முதலாளித்துவத்திற்கு எதிரான) தள்ளுகிறது.
பாட்டாளிவர்க்கமானது தனது நலன்களுக்காக போராடும் போது பெண்கள் தமது உரிமைகளுக்காக போடுவார்கள்.

பெண்களது உரிமைப் போராட்டம் என்பது பல அடிப்படைகளைக் கொண்டது.
முதலாளித்துவத்திற்கு எதிரான பெண்களது போராட்டங்களில்

சம சம்பளத்திற்கான போராட்டம்.
உற்பத்தி படிமுறைகளில் தலைமை தாங்குவதற்கான போராட்டம்.
மறுஉற்பத்தி மீதான தமது உரிமைக்கான போராட்டம்.
கூலி வழங்கப்படாத பெண்களது வேலை/ மறைமுகமாக சேவை வழங்கும் பெண்களது உழைப்பு (வீட்டு வேலைகள் ) சம்பளம் கோரும் போராட்டம்.
6 மணிநேர வேலைநாளுக்கான போராட்டம் என பலவற்றினைக் கூறலாம்.
இங்கு நாம் மேற்கூறியது போன்று மறுஉற்பத்தியில் தமது கட்டுப்பாட்டை நிலைநிறுத்துவது பெண்களதுஉரிமை. இதன் அடிப்படையில் முதலாளித்துவத்திற்கு எதிராகப் போராடும் போது நேரடியாகப் பாதிக்கும் காரணிகளில் இது மிகமுக்கிய காரணியாகும்.

இக்கருக்கலைப்புரிமை போராட்ட மானது முதலாளித்துவத்தை அடிப்படை, கட்டுமானம் ஆகிய இரண்டினையும் ஆட்டங்காண வைக்கிறது.

அடிப்படையில்

மூலதனத்தின் வளர்ச்சிக்கு மறு உற்பத்தியும், உற்பத்திசக்தியும் மூலாதாரங்களாகும். இதன் அடிப்படையில் பெண்களது கருக்கலைப்புரிமைப் போராட்டமா னது அடிப்படையைத் தகர்க்க முற்படுகிறது.
பெண்கள் கருக் கலைப்பு சம்பந்தமான முற்று முழுதான உரிமைகளைப் பெறும் போது முதலாளித்துவமானது உற்பத்தி சக்திகளின் மீதான தனது கட்டுப்பாட்டை இழக்கிறது. இக்கட்டுப்பாட்டை இழப்பதானால் முதாலளித்துவம் நியந்தனை விதிக்க இயலாமவ் போகிறது. இதன் மூலம் முதலாளித்துவத்தின் வளர்ச்சி குறைக்கப்படுகிறது. முதலாளித்துவம் புதியமுறைகளை பயன் படுத்துவதுடன்

www.tamilarangam.net

சமரசத்திற்கும் முற்படும்.

இந்நிலையில் சமரசத்தின் அடிப்படையில் பெண்கள் மீதும் பாட்டாளிவர்க்கம் மீதும் மேற்கொள்ளும் ஒடுக்குமுறையானது பாட்டாளிவர்க்கத்திற்கும் முதாளித்துவத்திற்கும் எதிரான மரபு ரீதியான போராட்ட வடிவத்தை எடுக்கிறது.

மேற்குறிப்பிட்ட நிலைமையானது ஏனைய குறிக் கோளின் அடிப்படையிலானவற்றிற்கும் பொருந்தும்.

இங்கு குறிப்பிட்ட விடயங்கள் பற்றிய ஆய்வு நவீன முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் அடிப்படையிலானது. இந்நிலையானது மேற்கு ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் வளர்ச்சி யடைந்த நிலையிலும் ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளில் போராட்ட முனைப்பு ஏற்பட்ட நிலையிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் குழம்பிய நிலையிலும் காணப்படுகிறது.

கட்டுமானத்தில்.

சமூகத்தின் கட்டுமானமானது மூலதன, ஆணாதிக்க நலன்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டது. இக்கட்டமைப்பை ஸ்திரமான நிலையில் வைத்திருப்பதற்காக அமைக்கப்பட்டவையே எழுதப்பட்ட எழுதப்படாத சமூக விதிகளாகும்.

சமூகவிதிகள் என்பது சமூகப் பெறுமானங்களை வரையறுக்கிறது. சமூகப் பெறுமானங்களை வளர்ப்பதற்கும், கட்டிக்காப்பதற்கும் அல்லது அடைவதற்கு மேற் குறிப்பிட்ட எழுதப்பட்ட எழுதப்படாத விதிகளும் பெரும் பங்கினை வகிக்கின்றன.

எழுதப்பட்ட எழுதப்படாதவிதிகள் சமூகத்தின் அங்கத்தவர்கள் மீது ஆரம்ப காலகட்டத்திலிருந்தே திணிக்கப்பட்டு, பயிற்றப்படுகிறது.

சமூகத்தின் எழுதப்பட்ட எழுதப்படாத விதிகள் ஒவ்வொரு சமூகத்திலும் மாறுபடுவதுடன் அதனைப் பயிற்றுவிக்கின்ற நிறுவனங்களும் மாறுபட்டவை.

முதலாளித்துவ சமூகத்தில் குடும்பம், மதம், கல்விநிலையங்கள் என்பவையும் இவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அனைத்து சமூக ஸ்தாபனங்களும் மேற்குறிப்பிட்ட வரையறைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சமூகப் பாத்திரங்களும் சமூகத்தின் அங்கத்தினரும் எழுதப்பட்ட எழுதப்படாத விதிகளை திணிக்கும் அல்லது பயிற்றும் கருவிகளாகவும்/ சாதனங்களாகவும் முறைகளாகவும் உள்ளன. இதனடிப்படை பொருள்முதல்ரீதியானது.

கட்டுரையின் முன்பகுதியில் குறிப்பிட்டது போன்று பெண்களின் மூலதனத்திற்கு எதிரான போராட்டம் என்பது மூலதனத்தை பாதிப்பதுடன் மேற்குறிப்பிட்ட முதலாளித்துவ கட்டுமானத்தின் மீதும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

பெண்களின் எழுச்சியன் விளைவானது முதலில் சமூக கட்டுமானத்தினையே பாதிக்கிறது. இப்பாதிப்பின் ஆரம்பமானது

www.tamilarangam.net

சமூகக் கட்டு மானத்தின் அடித்தளமான குடும்பத்தினைப் பலவீனப் படுத்துகிறது.

குடும்பத்தினுள்

பெண்ணினது குடும்பபாத்திரம் மாற்றம் அடைகிறது.
மறு உற்பத்தி இயந்திரம் என்ற நிலையிலிருந்து பொருளாதார ரீதியான பங்கினை வகிக்கும் தன்மையுடைய பாத்திரமாக மாற்றம் அடைகிறது.

சமூகத்தில்

வீட்டிற்குள் இருக்கும்வரை பெண்களது சமூகப் பாத்திரமானது சமூகத்தின் மீது எந்தவிதமான நேரடிப் பாதிப்பினையும் ஏற்படுத்தாத, அதில் நேரடி தலையீடு செய்யாத ஒரு வலுவற்றதாகவே இருக்கிறது.
இதற்கு மாறாக வீட்டிற்கு வெளியே இயங்கும் ஒரு உற்பத்தி சக்தியாக பெண் மாறும் போது அவளது சமூகப் பாத்திரமானது சமூக அரசியல் பொருளாதாரத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் சக்தியாக பரிணாமம் அடைகிறது.

இந்நிலையில் ஒவ்வொரு சமூகஅரசியல் இயக்கமும் தம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் மீது முடிவுகள் எடுக்கும் போது பெண்களையும் கருத்திற்கொள்ள வேண்டிய நிலைமைக்கு நிர்ப்பந்திக்கப்படுகிறது. இந்நிலைமையின் வளர்ச்சியானது வெறுமனே முதலாளித்துவ சமூகம் தனது தேவைக்கு பெண்களைப் பயன்படுத்திக் கொள்ள வழங்கும் சில சலுகைகளும் இக்காலத்தில் எழுந்த பெண்களின் போராட்டத்தின் விளைவு களுமே ஆகும்.

இதன் தொடர்ச்சியானது பெண்கள் சமூக அரசியல் ரீதியிலான அறிவையும் பொருளாதார தொழிநுட்ப ரீதியான அறிவைப் பெற்றுக் கொள்ள உதவுவதுடன் தமீமீது சுமத்தப்பட்டு இருக்கும் சுமைகளையும் பகுத்து அறிந்து கொள்ளும் நிலையை வந்தடை கின்றனர்.
இத்தன்மையின் ஒரு பிரச்சனையின் ஒருபகுதியாகவே பெண்கள் தமது உடல் மீதான முதலாளித்துவத்தின் மேல் கட்டுமானத்தின் கட்டுப்பாட்டினை எதிர்த்து போராட முன்வருகின்றனர்.

இதற்குட்பட்டதாகவே

Porno ( bluefilm) இற்கு எதிரான போராட்டம்.
கருத்தடைச்சாதனங்களுக்கான போராட்டம்.
தேவையின்/தெளிவு அடிப்படையிலான திறந்த பாலியல் உறவு.
தன்இனச்சேர்க்கை அங்கீகரிப்பு போராட்டம்.
விபச்சாரத்திற்கு எதிரான போராட்டம் என பல போராட்டங்கள் நிகழ்கின்றன. மற்றும் கருக்கலைப்புரிமைப் போராட்டமும் மேற்குறிப்பிட்ட வகைக்குட்பட்ட ஒன்றாகும்.

கருக்கலைப்புரிமை போராட்டத்தின் பாதிப்பு அவ் உரிமை போராட்டத்தின் விளைவாக ஏற்படும் தாக்கங்களை பின்வருமாறு வரையறுக்கலாம்.

www.tamilarangam.net

போராட்டத்திற்கான உந்துசக்தியாக.

வர்க்க எல்லை கடந்து பெண்களை அணிதிரட்டுவது.

மறுஉற்பத்தியுடன் சம்பந்தமான நடவடிக்கைகள் மீது சமூகத்தால் ஏற்படுத்தப்பட்ட மாயைகள் மீது கேள்வி எழுப்படுகிறது.

கர்ப்பம் சம்பந்தமான ஆண்களின் உரிமைகள் சம்பந்தமான வரையறைகள் மீது கேள்வி எழுப்பப் படுகிறது.

கருவின் மீது சமூகத்தின் ஆதிக்கம், சமூகத்தால் வழங்கப்படும் சட்ட விதிமுறைகள் சம்பந்தமாகவும், சமூகத்தின் பாத்திரம், பங்கு என்ன என்பது பற்றி கேள்விகள் எழுப்பப் படுகிறது.

இவைகளுக்கு மேலாக அல்லது இவைகளின் அடிப்படையில் பெண்கள் கருவின் மீதானஉரிமை சம்பந்தமான விளக்கத்துடன் கூடிய தெளிவை வந்தடைகின்றனர்.

இறுதியாக கருக்கலைப்புரிமை போராட்டமானது பெண்களது விடுதலை, உரிமைப் போராட்டம். வர்க்கப்போராட்டத்திலிருந்து விடு வித்து தனியாக பார்க்கப்பட முடியாதது.

மேலும் இப் போராட்டமானது பாட்டாளிவர்க்க நலன்களின் அடிப்படையில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிலைநிறுத்துவதற்கு நடைபெறும் நீண்டகாலப் போராட்டத்தில் பெண்களை உந்துசக்தியாகவும், தெளிவுடைய பாட்டாளிவர்க்க முதன்மைத்தன்மையுடையதாகவும் உருவாக்குவதற்குப் பங்குவகிக்கும் எழுச்சிகளில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இது வர்க்க எல்லை கடந்த அனைத்து வர்க்க பெண்களையும் முதலாளித்து வத்திற்கு கீழ்ப்பட்ட அனைத்து ஊசலாடும் சக்திகளையும் முதலாளித் துவத்திற்கு எதிராக பாட்டாளி வர்க்கத்துடன் கைகோர்க்க வழி செய்யும் காரணிகளுள் ஒன்றாகும்.

சோசலிச கட்டுமானத்தில் முற்று முழுதான பாத்திரங்களை (கடந்த கால 'சோசலிசக்கட்டுமான' அநுபவங்களில் பெண்களின் பாத்திரமானது சோசலிச கட்டுமானத்திற்கான வெறும் உற்பத்தி சக்திகளே. உ*ம் முன்னாள் சோவியத்யூனியன், முன்னாள் சீனா) அதாவது வெறும் உற்பத்திசக்தி மாத்திரமல்லாது தன்நிலைகொண்ட முதன்மையான மேம்பட்ட அரசியல் தெளிவுடைய பாத்திரத்தை வகிக்க பெண்களை தயார்நிலைப் படுத்துகிறது.

இக்கட்டுரையில் நாம் குறிப்பிட்ட ஒவ்வொரு விடயமும் ஒவ்வொரு முழுமையான கருத்துக்களே. சொல்லப்பட்டுள்ள ஒவ்வொரு வரிகளும் தெளிவான முறையில் விரிவாக எழுதப்படவேண்டியவை.

நாம் முன்பு குறிப்பிட்டது போல விவாதத்திற்காக எழுதப்பட்டவை அல்ல. மாறாக இங்கு குறிப்பிட்ட கருத்துக்கள்

www.tamilarangam.net

விரிவாக ஆராயப்பட்டு பெண்களின் உரிமைப் போராட்டம் வர்க்கப் போராட்டமும் ஒன்றினுள் ஒன்று கீழ்படுத்தப்படாது சமான நிலையில் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

பெண்களது உரிமைப் போராட்டமானது எந்தவகையிலும் எந்த ஒரு போராட்டத்தினுள்ளும் கீழ்ப்படுத்தப்பட்டதல்ல.

கருக்கலைப் புரிமைப் போராட்டத்திற்கான நியாயங்களையும் தேவைகளையும் வலியுறுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இதேவேளையில் இப் போராட்டத்தைப் பாட்டாளிவர்க்கப் பெண்கள் நடத்தும் வேளை முதலாளித்துவத்தால் விளை விக்கப்படும் தடைகளும் தீமைகளும் மறைக்கப்படவோ மறுக்கப்படவோ கூடியவைகள் அல்ல அவையும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியவையே.

## அகதிக் கால நாட்கள் - பற்றிய சிந்தனைகள்.

I

சுவற்றில் எந்த ஆணியையும் அடிக்காதே
கோட்டை நாற்காலி மீது வீசு போதும்.
ஏன் நான்கு நாட்களுக்குத் திட்டமிட வேண்டும்?
நாளை நீ வீட்டுத் திரும்பிச் செல்வாய்.
அந்த சிறிய மரத்தை நீரின்றி விட்டுவிடு.
எதற்காக இப்போது ஒரு மரம் நட வேண்டும்?
அது வாசல் படிகளின் உயரத்திற்கு வளருமுன்
உன் மூட்டைகளைக் கட்டிக் கொண்டு நீ இங்கிருந்து போய்விடுவாய்.

மனிதர்கள் உன்னைக் கடந்து செல்கையில்
தொப்பியை வைத்து உன் முகத்தை மறை.
அந்நிய மொழி இலக்கணத்தை
மேம்போக்காய் அறிவதில் என்னபயன்?
உன்னை வீட்டுக்கு அழைக்கும் செய்தி
நீஅறிந்த மொழியில் எழுதப் பட்டிருக்கிறது.

II

சுவற்றுக்குள் நீ அடித்த ஆணியைப் பார் ;
எப்போது நீ திரும்பி செல்வாய் என எண்ணுகிறாய் ?
உன் மனதின்உள் மையச் செய்தி
சொல்வதை அறிய விரும்புகிறாயா?
ஒவ்வொரு நாளும்
விடுதலைக்காக நீ உழைக்கிறாய்.
நீ அமர்ந்திருக்கிறாய் உன் அறையில்

எழுதியபடி
நீ உன் உழைப்பைப் பற்றி
என்ன நினைக்கிறாய்
என்றறிய விரும்புகிறாயா?
முற்றத்தின் மூலையில்
அந்த சிறிய தவிட்டு நிற மரத்தைப் பார் -
அதற்குஒரு முழுப்பாத்திரத்தில் நீ நீர் எடுத்துச் சென்றாய்.

BERTOLT BRECHT

நன்றி Poems of Bertolt Brecht.

www.tamilarangam.net

## ROSA LUXEMBURG
## ( 1871- 1919 )



சோசலிசத்தின் வரலாற்றில் பங்கு வகித்த பிரபல்யமான தத்துவ ஆசிரியர்களுள் ஒருவராக விளங்கிய றோசா லக்சம் பேர்க் போலந்து நாட்டைச் சேர்ந்தவர்.

தனது 19 வயதிலேயே அங்கிருந்த அரசிற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டமையினால் நாட்டை விட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டது.

சோலியத்திலிருந்தும் போலந்தி லிருந்தும் புலம் பெயர்ந்த பலருக்கு தஞ்சம் வழங்கிய இடமான Zurich ற்கு வந்து சேர்ந்த போது அங்கு மார்க்சிசவாதிகள் என தம்மைக் கூறிக் கொண்ட சோவியத்தைச் சேர்ந்த சோசலிஸ்ட்டுக்களின் அறிமுகம் இவருக்கு கிடைத்தது.

சூரிச் பல்கலைக்கழகத்தில் தனது படிப்பை முடித்துக் கொண்ட றோசா லக்சம் பேர்க் 1897 இல் யெர்மனிக்குச் சென்று அங்கு அரசியல் பிரச்சாரகராகவும் எழுத்தாளராகவும் பணிபுரிந்தார்.

1898 வரை போலந்தின் சனநாயக கட்சியிலும் பின்பு யேர்மன் சோசலிச சனநாயகக் கட்சியிலும் பணி புரிந்த போதிலும் இறுதிவரை போலந்தின் சனநாயகட்சியின் முக்கிய உறுப்பினர்களுடன் தொடர்புகளைப் பேணி வந்தார்.

1896 -1898 காலப்பகுதியில் DIE NEUE ZEIT என்ற பத்திரிகையில் Edvard Bernstein Problems of Socialism எனும் தலைப்பில் மார்க்சிசத்தின் கொள்கைகளை கடுமையாக விமர்சித்து கட்டுரைகளை எழுதியிருந்தார்.

யேர்மனியின் தொழிலாளர் அமைப்பில் இணைந்திருந்த றோசா லக்சம் பேர்க் மார்க்சிச கொள்கைகளுக்கு உரம் சேர்க்கக் கூடிய விவாதங்களையும் ஆதாரங்களையும் முன்வைத்து மிக அற்புதமான முறையில் பதிலளித்து கட்டுரைகளை எழுதினார்.

1903- 4 ல் லெலனினுடன் தேசியம் பற்றிய விவாதத்தில் முரண்பட்டதோடு தொழிலாளர் அமைப்பானது சனநாயகப் பண்புடையதாக இருக்க வேண்டும் என்ற விமர்சனத்தையும் முன்வைத்தார்.

1907 இல் Stutgart இல் நடைபெற்ற கூட்டத்தில் சோவியத் போலந்து

www.tamilarangam.net

கட்சிகளின் சார்பில் கலந்து உரையாற்றினார். 1905- 1910 காலப்பகுதியில் றோசா லக்சம் பேர்க்கிற்கும் SPD இன் முக்கிய உறுப்பினருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டதைத் தொடர்ந்து SPD யில் பிளவு ஏற்பட்டது.

1913 இல் றோசா லக்சம் பேர்க்கின் மிகச் சிறந்த வெளியீடுகளில் ஒன்றான The Accumulation of Capital வெளிவந்தது.

புரட்சியல் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்த இவர் முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து ' இயற்கையான ' மாற்றத்தினூடாக சோசலிச சமுதாயம் மலரும் என்பதில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.

மக்கள் எழுச்சியிலும் சனநாயகத்திலும் நம்பிக்கை கொண்ட றோசா லக்சம்பேர்க் புரட்சிக்காக தொழிலாளர்களை அணி திரட்டுதில் மிகவும் ஆர்வத்தோடு ஈடுபட்டதோடு ஏனைய நாடுகளின் தொழிலாளர் அமைப்புக்களின் வளர்ச்சியை அவதானிப்பதற்காக டச்சு , சுவிரிஷ் மொழிகளைக் கற்றுத் தேர்ச்சி பெற்றார்.

1917 இல் சோவியத்தில் நடைபெற்ற புரட்சியை வரவேற்றபோதிலும் புரட்சயின் பின் குறுகிய காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் அவரைக் கவலைக்கு உள்ளாக்கின. 1918 இல் லெனினும் ரொட்ஸ்கியும் Bolsheviks அல்லாதோருக்கு எதிராக பயங்கரவாதத்தைப் பிரயோகித்தபோது அவர்களுடன் உடன்பட மறுத்தார்.

அதிகாரத்திற்கு எதிராகவும் சோசலிசத்திற்காகவும் தனது வாழ்நாள் முழுவதையும் அர்பணித்துப் போராடிய றோசா லக்சம் பேர்க்கின் இறுதி வெளியீடு 1919 இல் பேர்லினில் வெளிவந்தது. மறுதினம் யேர்மனிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்துச் செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார்.

இவருடைய மரண ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

றோசா லக்சம் பேர்க்கின் படைப்புக்கள் யாவும் ஏனைய ஐரோப்பிய மொழிகளுக்கு மொழிபெயர்க்கப் படாமலேயே இன்றும் உள்ளன.

இன்று எமக்கு கிடைக்க கூடியவற்றில் The Mass Strike , Reform or Revolution, The National Questions, Party and Class, Rosa Luxemburg's Criticism of the Bolsheviks in Power, The Accumulation of Capital மிகச் சிறந்தவையாகும்.

**வானதி.**

www.tamilarangam.net

## உண்மை பற்றிய கவிதை.

தன்யா
தமிழுக்குப் பரிச்சயமற்ற ஒரு பெயர்
ஆனாலும் அது ஏனோ அவளுக்கு
தனிமையாய் சில நேரம்
இருக்கையில்
நெஞ்சில் வந்து சிக்கிக் கொள்ளும்.
சின்ன சின்ன முட்களை விதைத்து
வேதனையூட்டும்.
புரியாத் துயரில்
வலிமை குன்றிய
மனத்தின் கூவல்
காதில் கேட்கும்
தன்யா. . தன்யா

காலத்தின் அழைப்பில்
புதுயுகம் படைத்திட
கனவுகள் சுமந்து
களத்தினுள் புகுந்தாய்.

நேற்றுத்தான நடந்தது போல்
எத்தனை நிகழ்வுகள்
எத்தனை நிகழ்வுகள்

கிழக்கே வானம்
மெலிதாய் சிவக்கையில்
காகம் கரைதலும் கேட்கு முன்பே
ஓங்கிய பனைகள்
ஓரமாய் நிற்கும்
பனிபடர்ந்த செம்மண் பாதையில்
சைக்கிளில் செல்வோம்.

சின்ன சின்னக்
குடில்களுள் நுழைந்து
பஞ்சை பாமரர்
இதயந் தொட்டோம்.

அடுப்பங்கரை மூலையில்
ஆழ்ந்துபோன பெண்களிடம்
புதுப்புது சேதிகள்
படுவும் சொல்லி
அவர் கரங்களைப் பிடித்து
வெளியே அழைத்து
சிருங்கார விடியலை
தேடச் சொன்னோம்.

மாசிப் பனியில்
குளிரும் இரவில்
ஒட்டுப் போட்ட
இரவல் சேலையை
இழுத்து இழுத்துப் போர்த்தபடி
இலட்சியக் கனவுகள்
பலவும் கண்டோம்.

பள்ளிக்காதலும் பகட்டு வாழ்வும்
புரட்சி வாழ்வுக் கிடைஞ்சல்
என்பதால் தூக்கி எறிந்தாய்
துணிவுடனே.

எல்லாம் முடிந்தது
எல்லாம் முடிந்தது.

பருவமும் மாறிட
வசந்தமும் மறைந்தது.

இன்று நீ !
' வடக்கே ' தொலைவில்
நிலவறைச் 'சிறை 'யில்
தனித்திருப்பாய்.
ஒளியைக் காணா
கண்களில் அது என்ன
கண்ணீரா ?
ஓ என் சின்ன தன்யா !
இது எப்படி நடந்தது?

நினைக்கையில் கனவுபோல்
உணர்கையில் கடிவிஷயமாய்
நெஞ்சில் இறங்கிவிடும்
ஜீரணிக்க முடியாத உண்மையை
இதயத்துள் திணித்தபடி
காலத்தின் பதிலுக்குக் காத்திருப்போம்
நாட்களை எண்ணியபடி.

## மொறின் 1991

சொந்த மண்ணில்
அமைதி தொலைத்து
சேர்ந்த மண்ணில்
நம்மையே தொலைத்தோம்
கைரேகை பதித்ததால்
'கிரிமின' லாகி
கம்பியூட்டருக்குள்
சரித்திரமானோம்.
யன்னல்
அடைத்த வீட்டினுள்
விடுதலையாகி
வெளியே சிறையாகி
தலை குனிந்தே
நடப்பதால்
கூனாகி நிற்கும்
விசித்திர மனிதர்
நாங்கள்

வீரத்தமிழர் !

கருணா.

www.tamilarangam.net

# கடவுளே ! இது உண்மையா ?

மல்லிகா.



www.tamilarangam.net

ரியூசன் முடிந்து அனுஷா வீட்டிற்குள் நுழையும் போது அவளைச் சுற்றி வளைத்த துஷ்யந்தியும் சமந்தியும் " ஹையா குட் நியூஸ் அனுஷாக்காவிற்கு கலியாணம். . " என சிரிக்கலாயினர்.

வீட்டில் உள்ள அனைவரினது முகங்களிலும் மற்றைய நாட்களை விட மாறுதலை அவதானித்த அனுஷியா, மேசைமீது அரைவாசி குடிக்கப்பட்ட நிலையில் நெக்டோ போத்தல் ஒன்றும் அதனருகே வெறும் குவளை ஒன்றும் இருக்கக் கண்டாள். அவள் அம்மாவை உற்றுப் பார்த்தாள்.

" இனி உந்த வகுப்புகளுக்குப் போனது காணும், இந்த மாதக் கடைசியிலை எல்லா ரியூசனையும் நிப்பாட்டிப் போட வேணும் "

"ஏன் அம்மா சோதனைக்கு இன்னும் மூண்டு மாதங்கள் தானே இருக்குது "

" என்ன கண்டறியாத சோதனை அங்க உனக்கொரு சம்பந்தம் ஒண்டு சரி வந்திட்டுது . அப்பாடா போதும் கொஞ்சம் . . என்றவாறு அனுஷியாவின் தாய் ஒரு பெருமூச்சை வெளிவிட்டாள்.

"இப்ப தான் கரோலிஸ் அப்பு வந்து சொல்லிப் போட்டு போறார் பொருத்தம் எல்லாம் சரியாம். . மாப்பிள்ளை யேர்மனியில இஞ்சினியராம். . இரண்டு அண்ணன்மார் லண்டனிலையாம். . தமக்கை கனடாவிலையாம். . . நல்ல குடும்பம். . " தாய் இவ்வாறு கூறிக் கொண்டு செல்கையில்

"முடியாது என்னாலை இப்ப யெர்மனிக்குப் போக ஏலாது. அவசரமா கல்யாணம் கட்டவும் என்னால ஏலாது. . இந்த தூர இடங்களிலை கல்யாணம் பேச வேண்டாம் எண்டு உங்களுக்கு எத்தினை தரம் சொன்னனான் "

" அப்பிடிச் சொல்ல ஏலாது. இதுக்கு நீ சம்மதிச்சே ஆக வேணும். . . அப்பாவும் இப்ப காட் பேசன்ற் இன்னும் இரண்டு பெட்டையளும் இருக்குதுகள் பாவம். . அந்தப் பெடியன் அங்க கிழவனாகுது. அவனுக்கும் ஏதாவது சம்பந்தம் ஒண்டு பேசி முடிக்க வேணும். உனக்கு எத்தினை சம்பந்தம் பேசினதெண்டு உனக்கு தெரியும் தானே."

" நான் எத்தினை கடவுளை நேந்தனான். உன்ரை அதிஸ்டத்திற்குத்தான் பிள்ளை சரி வந்திருக்கு. . . உன்ரை படத்தை பாத்திட்டு அந்தப் பிள்ளை இதுக்கு சம்மதிச் சிட்டானாம். . சனிக்கிழமை அவரின்ர தாய் தகப்பன் உன்னைப் பாக்க வருகினமாம் உனக்கு அங்க போறதுக்கு ரிக்கற்றும் அனுப்புகிறாராம். "

" என்ரை படத்தை விரும்பினவர் என்னை விரும்புவரெண்டு எப்பிடி சொல்ல முடியும். இப்ப எத்தினை பேர் நான் கறுப்பு எண்டு வேண்டாம் எண்டிட்டினம். மற்றது அவரது தாய் தகப்பன் என்னைப் பார்த்து பிரியோசனம் இல்லை. . "

" ஏன் பிரியோசனம் இல்லை அதுதானே

www.tamilarangam.net

எங்கட வழக்கம். மாப்பிளை இங்க இல்லாத படியால் அவையள் வந்து எங்கட வீடு வளவுகளை பாத்திட்டுப் போயினம் . . அதிலை ஒரு பிழையும் இல்லை. . ."

" என்னாலை முடியாது. . என்னைப் படிக்க விடுங்கோ " என அனுஷியா அழத் தொடங்கினாள்.

" ஏன் தரித்திரம் பிடிச்சமாதிரி அழுகிறாய். . . . நடக்க வேண்டியதுகள் அந்தந்த நேரத்துக்கு நடந்து முடிஞ்சால்தான் எங்களுக்கு நின்மதி "

" உங்களுக்கு நாங்கள் அவ்வளவு பாரமே. . அவையள் வாறது எங்கட சொத்துக்களில இருக்கிற விருப்பத்திலை தான் "

" இங்க வாயை மூடு. உனக்கு வாய் கூடிப் போச்சுது "

" அங்க அக்காமார் படுகிற கஸ்ரங்களைப் பாத்த பிறகும் உங்களுக்கு கண் திறக் கேல்லையோ , மூத்த அக்காக்கு சாதக மெல்லாம் பாத்துத்தானே அந்தக் குடிகாரனைக் கட்டி வைச்சனீங்கள்.. பாவம் அவ வேண்டுற அடி. . "

" அது அவவின்ர விதி. அதுகளுக்கு நாங்கள் ஒண்டும் செய்ய ஏலாது. அவ தன்ரை வாயாலை தானே அடிவாங்கிறா. மற்றது புருசன்தானே அடிக்கிறார் "

" இது நல்ல கதையெல்லோ. நாங்க ஏன் ஆம்பிளையளிட்டை அடி வாங்க வேணும்? அவைக்கு சீதனமும் குடுத்து அடியும் வாங்க வேணுமே ?"

" அப்ப நீ வீட்டில முத்தப் போறியோ ? , உன்ரை பின்னடி வாழ்க்கையைப் பற்றி யோசிக்க வேணும் தானே"

" ம். என்ரை பின்னடி வாழ்க்கை. . ஆம்பிளையாலையே எங்களுக்குப் பாதுகா ப்பு. ஒருகுடிகாரன் அம்பிட்டா பாதுகாப்பு த்தான் கிடைக்கும். "

" இனிக்காணும் நிப்பாட்டு. . எனக்கு வீட்டில அலுவல் கிடக்கு. . நாளைக்கு கடைக்குப் போக வேணும்.. . அங்க சரியான குளிராம். . . அண்ணனுக்கு எழுது உனக்கு உடுப்பு வாங்கி வைக்கச் சொல்லி. . "

" என்னால வெளிநாட்டுக்குப் போக ஏலாது. அண்ணனும் அக்காவும் அங்க சுகம்தானே காணுகினம். . "

" என்னடி அலம்புகிறாய். . அவை அங்க சுகமாத்தான் இருக்கினம். அந்தப் பொடியன் அனுப்பின காசில தான் நாங்க இந்த மூண்டு வீடும் கட்டினது."

" இப்ப உனக்குச் சீதனமாகக் குடுக்கிறதும் நகை செய்யிறதும் அவன் அனுப்பின காசில தான். நிர்மலாவும் உனக்கு எவ்வளவு சாமான்கள் அனுப்பினவ. நீயே போய் பார்க்கலாந்தானே. . . உனக்கு கிடைச்ச மாப்பிளையும் சரியான நல்ல பெடியன்"

" ம் . . நல்ல பெடியன்தான். . நீங்கள்

என்ன சாத்திரமே பாத்தனியள் ? "

" விசரிபோல கதைக்காதை உதுதான் ஒரு பழமொழியும் இருக்குது. ‘ பொம்பிளையளின்ர அறிவு அகப்பைக் காம்பின்ர நீளமெண்டு ’ இதெல்லாம் சும்மா சொன்னதுகள் இல்ல. காரணத்தோடதான் சொன்னவை "

" ம் இதெல்லாம் ஆம்பிளையள் தங்கட தேவையளுக்குத்தான் சொன்னவை . நாங்களும் கொஞ்சம் மூளையைப் பாவிக்க வேணும். கண் திறந்து பாக்க வேணும். . " என்றவாறு அனுஷியா தனது புத்தகப் பையிலிருந்து ஒரு நீலவுறைக் கடிதத்தைக் வெளியல் எடுத்தாள்.

" இது என்ன கடிதம் ? " தாய் பதைபதைப்புடன் விசாரித்தாள்.

" இது நிர்மலாக்காவின்ர கடிதம். . இன்டைக்கு காலமை நான் ரியூசனுக்கு போகைக்க தபாற்காரர் மறிச்சு தந்தவர். . அத வாசிச்ச நேரத்தில இருந்து என்ர மனம் சரியல்லை.. பாவம். . அவ தனிய இருந்து அங்க கஸ்டப்படுகிறா."

" அப்பா வின்ர வருத்தத்தால அவருக்கு ஒண்டும் சொல்லவேண்டாம் எண்டு எழுதி யிருக்கிறா. நீங்கள் எனக்கும் அங்க கலியாணம் பேசுறதை கேள்விப்பட்டு அவசரமாக இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறா " என்று கூறிக் கொண்டு அனுஷியா கடிதத்தைப் பிரித்தாள்.

" ஐயோ கடவுளே இது என்ன கரைச்சல். எங்க மற்றக் கடிதங்கள் ?"

" இதுக்கு முந்தியும் அக்கா தன்ர கஷ்டங்களைச் சொல்லி உங்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறா. அதை யொண்டையும் எங்களுக்குக் காட்டாமல் மறைச்சுப் போட்டியள் . "

" அதொண்டும் உனக்குத் தேவை யில்லை. . அப்பா ஆஸ்பத்திரியில இருந்து வர முதல் இந்தக் கடிதத்தை வாசி. "

" வடிவாக் கேளுங்கோ. " என்றபடி கடிதத்தை வாசிக்கத் தொடங்கினாள் அனுஷியா.

யேர்மனி

------ -- --

அன்புள்ள தங்கச்சி அனுஷியாவிற்கு !

இதற்கு முன் நான் அனுப்பிய கடிதங்கள் கிடைத்திருக்குமென நினைக்கிறேன்.

என்னுடைய பிரச்சனைகள் வரவரக் கூடிக் கொண்டே போகின்றன. நான் இவ்வளவு காலமும் நியூட்டனிடம் அடிவாங்கி வெளியில் சொல்லாமல் இருக்கிறதுக்கு காரணம் என்ர ரெண்டு பிள்ளைகளுக்காகவும், எங்கட கௌரவம் கெட்டுவிடும் என்பதற்காகவுமே.

எனக் கெண்டு ஒருவருமே இல்லை. மற்ற சிலோன் ஆக்களோட கதைக்கவும் நியூட்டன் விடுவதில்லை.

www.tamilarangam.net

பாஷை தெரியாதபடியால் யேர்மன் ஆக்களுக்கும் என்னுடைய பிரச்சனையை சொல்ல ஏலாது.

வீட்டுவேலைகளாலும், பிள்ளைகளின் அலுவல்களாலும் பாஷையை படிக்க எனக்கு சந்தர்ப்பம் கிடைக்க வில்லை. அம்மா அப்பா அண்ணாவுக்கும் தம்பிக்கும்தானே இங்கிலீசும் படிப்பிச்சவை.

அவர் தலையில பிடிச்சு அடிக்கிறதாலை என்னுடைய தலைமயிரும் இப்ப குறைஞ்சிட்டுது.

ஒரு நாள் எனக்கு அடிக்கும் போது நான் மயக்கம் போட்டு விழுந்திட்டன். பிள்ளையள் அழுத சத்தம் கேட்டு பக்கத்து வீட்டு யேர்மன் மனுசி ஓடி வந்து பொலிசுக்கு ரெலிபோன் பண்ணி. . பிறகு என்னை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனார்கள்.

நெற்றி வெடித்திருந்ததால் மூன்று தையல் போட்டார்கள். சொண்டு வீங்கி இருந்ததால தண்ணியும் குடிக்க ஏலாம இருந்தனான். நியூட்டன் வெளியில காட்டுற அப்பாவித்தன வேஷத்தால எல்லாரும் அவரைத் தான் நம்பியினம்.

நேற்று ரெலிபோன் எடுத்த வேளையில தான் அண்ணாவுக்கும் இது தெரிய வந்தது. அவர் 500 கிலோ மீற்றருக்கு அங்காலதான் இருக்கிறார். அவருக்கும் சரியான பிரச்சனைகள். பிரச்சனைகள் கூடி இப்ப குடிக்கவும் பழகிட்டார் என்று கேள்வி.

என்னுடைய பிரச்சனைகளை அவருக்குச் சொன்ன போது இது குடும்பப் பிரச்சனை எண்டும் மற்ற தங்கச்சிமாரும் இருக்கிற படியால் இன்னும் கொஞ்சக் காலத்திற்குப் பொறுக்கச் சொன்னார். என்னால இனியும் பொறுக்க முடியாது.

ஏன் இவ்வளவு காலமும் வாயை மூடிக் கொண்டு இருந்தனான் எண்டு பொலிசாரும் விசாரிச்சினம். எனக்கு மட்டுமில்ல இங்க கனபேருக்கு இந்தக் கதிதான். இப்பிடியான பிரச்சனைகளால நிறைய பொம்பிளையள் தற்கொலையும் செய்திருக்கினம். ஏன் கொலையும் செய்யப்பட்டிருக்கினம்.

அது மட்டுமே , அதைவிட எத்தனை பொம்பிளையள் இங்க வந்த பிறகு கட்டையெண்டும், கறுப்பெண்டும் நிராகரிக்கப்பட்டு இருக்கினம்.

நானும் எத்தினையோ தரம் தற்கொலை செய்ய யோசிச்சனான். ஆனா இப்ப நான் அந்த எண்ணங்களை எல்லாம் கைவிட்டிட்டு என்ரரெண்டு மகள் மாருக்காக ஒரு புது முடிவு எடுத்தி ருக்கிறன். அதைப்பற்றி பிறகு எழுதுகிறேன்.

நீ என்னைவிட புத்திசாலி எண்ட படியாலும், உனக்கு இங்குள்ள பிரச்சனைகளைத் தெரியப்படுத்த வேண்டும் எண்ட படியாலும், உனக்கு இங்கு ஒரு சம்பந்தம் பேசி

www.tamilarangam.net

முடித்திருக்கென்று அண்ணா நேற்று சொன்ன படியாலும் தான் நான் இந்தக் கடிதத்தை அவசரமாக எழுதுகிறேன்.

உனக்கு பேசியிருக்கிற பெடியன் சரியில்லையாம். சரியான குடிகாரனாம். நிலையான வேலையும் இல்லையாம் என்று உங்களுக்கு எழுதும்படி அண்ணா எனக்குச் சொன்னார். நல்ல நேரத்திற்கு நியூட்டன் வீட்டில இல்லை.

தங்கச்சி இந்த கலியாணத்திற்கு சம்ம திக்க வேண்டாம். இங்கு வாழ்வதென்பது சரியான கஷ்டம். இரவு விழுந்த பள்ளத்தில் பகலிலும் விழ ஏலாது. . . ஆனபடியால் நீ கொஞ்சம் யோசி.

வசதிக்காக இங்கு வரும் எண்ணத்திலோ, அம்மா அப்பாவை திருப்தி செய்யவோ அல்லது அண்ணாவின் பொறுப்புகள் குறையும் என்று யோசித்தோ நீ பிரச்சனைகளுக்குள் அகப்பட்டால் அது அநியாயம்.
இப்பிடித்தான் கனபொம்பிளையள் அநாதையாக்கப்பட்டு இருக்கினம்.

அண்ணாவைப் பற்றி யோசிக்கும் போது சரியான கவலை. அவர் எங்களுக்கு உதவி செய்யவேண்டும் என்பதற்காக ஒரு யேர்மன் பொம்பிளையை கலியாணம் கட்டி இருக்கிறார். எனக்கு அது கிட்டடியில தான் தெரியும். இப்ப அம்மா ஆக்கள் கலியாணம் பேசுறதைக் கேள்விப்பட்டு சரியான கவலையோடும், பயத்தோடும் தான் இருக்கிறார்.

நேற்று சொன்னவைகளைப் பார்த்தால் நஞ்சு குடிப்பார் போலத்தான் இருக்குது. அந்த யேர்மன் பொம்பிளையும் பாவம். . .

எங்கட சமூகத்தால எத்தினை பொம்பிளையள் வேதனைப்படுகினம். இனியாவது நாங்கள் கண்திறக்க வேணும்.

உன்னுடைய சீதனத்திற்காகவும், வேறு செலவுகளுக்காகவும் கூடியளவு பணம் அனுப்பச் சொல்லி அம்மா எழுதியிருந்தா. உங்களுக்கு பணம் அனுப்பும் ஒவ்வொரு வேளையும் நான் நியூட்டனிடம் அடி வாங்குகிறனான். அதை விட அவர் சொல்லுகிற கதைகளையும் சகிக்க முடியாது.

அவர்தான் எல்லாக் காசையும் வைத்திருக்கிறார். முடிவு எடுக்க முதல் வடிவாக யோசி. என்னுடைய வாழ்க்கை மாதிரி ஒரு சோகமான வாழ்க்கை உனக்கு வரக்கூடாதென நான் பிராத்திக்கிறேன்.

இப்படிக்கு
அன்புள்ள அக்கா


நிர்மலா.

கடிதத்தை வாசித்து முடித்த அனுஷியா கண்ணீருடன் அம்மாவை திரும்பி பார்க்கையில் . . .

" கடவுளே இதெல்லாம் உண்மையா ? " என்று கத்தியவாறு தாய் மயக்கம் வந்தவளாய் சுவரில் சாய்ந்து கொண்டிருந்தாள்.

www.tamilarangam.net

**பெண்ணிலைவாதம் பற்றி வழமையாகக் கேட்கப்படும் கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் ஓரளவிற்கு பதலளிக்கும் வகையில் சில கேள்விகளையும் அவற்றிற்கான பதில்களையும் நாம் இங்கு நன்றியுடன் மறுபிரசுரம் செய்கிறோம் .**



**பெண்ணிலைவாதம் என்றால் என்ன ?**

பல்வேறு கோட்பாடுகளைப் போல அல்லாமல் பெண்நிலைவாதத்தின் தத்துவார்த்த அல்லது கருத்தியல் ரீதியான தளத்தை ஒரு தனிக்கோட்பாட்டின் தொகுப்பிலிருந்து அது பெற்றுக் கொள்ளவில்லை எனவே அனைத்துப் பெண்களுக்கும் எக்காலங்களிலும் பொருந்தக் கூடிய ஒரு பொதுவான வரையறை இதற்குக் கிடையாது.

எனவே பெண்நிலைவாதம் ஸ்தூலமான வரலாற்று / கலாச்சார நடைமுறைகளிலும், பார்வைகள்/ உணர்வுகள்,/ செயற்பாடுகளின் நிலைகளிலும் தளம் கொண்டிருப்பதால் இதன் வரையறையானது மாற்றமடையக் கூடும் ; மாற்றமடையவும் செய்யும்.

17 ஆம் நூற்றாண்டில் பெண்நிலைவாதம் என்ற சொல் முதன்முதல் உபயோகப்படுத்தப்பட்ட போது அது கொண்டிருந்த அர்த்தம் இன்று அது கொண்டிருக்கும் அர்த்தத்திலிருந்து மிகவும் வேறுபட்டதாகவே இருந்தது.

இது பல்வேறு நிலையிலுள்ள பெண்களால் அவர்களின் வர்க்கப் பின்னணி கல்வித்தகமை/ உணர்வு - நிலை போன்றவற்றைப் பொறுத்து உலகின் பல்வேறு பகுதிகளிலும் ஒரு தேசத்துக்குள்ளேயும் பல்வேறு வகையாகப் பேசப்படலாம்.

ஒரே நிலையிலுள்ள பெண்கள் மத்தியிலும் கூட குறிப்பாக தந்தைவழி சமூகத்தின் தோற்றம் மற்றும் ஆண் மேலாதிக்க உணர்வுகளின் காரணங்கள் ( வரலாற்று வேர்கள் ) பற்றியும், வர்க்க / சாதிய/ இன/ பாலினச்சார்பற்ற ஒரு சுரண்டலற்ற சமுதாயத்தை

www.tamilarangam.net

நிர்மாணிப்பது சம்பந்தமாக பெண்கள் போராட்டத்தின் தொலை நோக்கித் தீர்மானங்களைப் பற்றியும் மாறுபட்ட பெண்நிலைவாதக் கருத் தோட்டங்களும் , இடம் பெறவே செய்கின்றன.

எனினும் பெண்நிலைவாதத்திற்கு ஒரு பரந்துபட்ட வரையறையாக இன்று எமக்கு இருப்பது இதுதான் (பங்களாதேஷ், இந்தியா, நேபால், பாகிஸ்தான், இலங்கை போன்ற தென்னாசிய நாடுகளின் பெண்களால் ஒரு சமீபத்திய பட்டறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது)

" சமூகத்திலும் வேலைத்தளத்திலும் குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்களின் உணர்வு நிலைகளும் இந்நிலையை மாற்றுவதற்கு பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வு பூர்வமான நடவடிக்கைகளும் " இதன்படி பாலின ரீதியான ஒடுக்குமுறை வடிவங்களையும் ஆண்மேலாதிக்கத்தையும், தந்தைவழி சமூகஅமைப்பையும் இனங்காணும் எவரும் ஒரு பெண்நிலைவாதியாகின்றார்.

ஆனால் வெறுமனே பாலின ரீதியிலான ஒடுக்குமுறை வடிவங்களை இனங் காண்பதோடு நின்றுவிடாமல் ஆண் மேலாதிக்கத்திற்கு எதிரான நடவடிக்கைளிலும் இறங்க வேண்டும் என்று வரையறை தெளிவாக சுட்டிக் காட்டுகின்றது. இந் நடவடிக்கைகள் எந்தவடிவத்தையும் எடுக்கலாம்.

உதாரணமாக ஒரு பெண் சிறுமைப் படுத்தப்படுவதை நிறுத்த முடிவு செய்வதை சுயகல்வி கற்று ஒரு தொழிலைத் தேடிக் கொள்ள முனைவதை, பர்தாவுக்குள் மறைத்துக் கொள்ள மறுப்பதை, குழந்தை பெற்றுக் கொள்வதில்லை என்று தீர்மானிப்பதை ஏனைய பல்வேறு ஸ்தாபன ரீதியிலான போராட்டங்களைப் போலவே பெண்நிலைவாத நடவடிக்கை களாகவே நாம் கருதுகிறோம்.

ஆக்கபூர்வமாகச் செயற்படுவதற்கு ஒரு அமைப்பைச் சார்ந்திருப்பது நல்லது. எனினும் ஒரு பெண்நிலைவாதியின் நிலைப்பாட்டை எடுப்பதற்கு நீங்கள் ஒரு அமைப்பைச் சார்ந்தே ஆகவேண்டும் என்ற அவசியம் இல்லை.

முன்னைய நாட்களின் பெண்நிலைவாதிகளின் போராட்டமானது பெண்களின் சனநாயக உரிமைகளுக்கான போராட்டமாக இருந்ததே அக்காலத்திய பெண்நிலைவாதிகளுக்கும், இன்றைய பெண்நிலைவாதி களுக்கும் இடையிலுள்ள பிரதான வேறுபாடாகும்.

அது கல்வி , வேலைவாய்ப்புரிமை, சொத்துரிமை, வாக்குரிமை, பாராளுமன்றத்திற்குச் செல்லும் உரிமை, கருத்தடை உரிமை, விவாகரத்துரிமை போன்றவற்றை

www.tamilarangam.net

உள்ளடக்கியதாக இருந்தது.

அதாவது முன்னைய பெண்நிலைவாதிகள் சட்டரீதியான சீர்திருத்தங்களுக்காகவும், சட்டரீதியான சமத்துவ நிலைகளுக்கான போராட்டங்களை குறிப்பாக வீட்டையும் குடும்பத்தையும் சம்பந்தப்படுத்தாத போராட்டங்களையுமே முன் எடுத்திருந்தனர்.

இன்றைய பெண்நிலைவாதிகளோ பாரபட்சங்களை முடிவுக்கு கொண்டுவருவதற்கு சட்ட ரீதியாலான சீர்திருத்தங்களைத் தாண்டி மேலே போயிருக்கிறார்கள். அவர்கள் பெண்ணின் முழுமையான விடுதலைக்காக செயற்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

எனவே இன்று பெண்நிலைவாதமானது வீட்டுக்குள் பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டு இருக்கும் ஆண்களின் மேலாதிக்கம்/ குடும்பத்தினால் அவர்கள் சுரண்டப் படுதல்/ கலாச்சார ரீதியிலும், மதரீதியிலும் வேலைத்தளத்திலும், சமூகத்திலும் தொடர்ந்து நிலவி வரும் அவர்களுடைய கீழான அந்தஸ்து / உற்பத்தி ஆகிய இரு முனைகளிலும் அவர்களுடைய இரட்டிப்புச் சுமை போன்றவற்றுக்கு எதிரான போராட்ட வடிவங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது.

அத்தோடு பெண்நிலைவாதம் பெண்மையும், ஆண்மையும் பரஸ்பரம் தனித்துவமானவையும், உயிரியல் ரீதியாக நிர்ணயிக்கப் பட்டதுமான இரு வேறு இனங்கள் என்ற கருத்தையே கேள்விக்குள்ளாக்கி இருக்கிறது.

எனவே பெண்கள் தமக்கு எதிரான ஒருதலை பட்சமான நீதிகள் மட்டுமல்ல அரசியல்/ சமூக/ ஆண் மேலாதிக்க ஒடுக்குமுறை போன்ற அனைத்து வடிவங்களிலிருந்தும் தமது விடுதலையைப் பெற்றிட தொடர்ந்து போராட வேண்டும் என்று பெண்நிலைவாதிகள் கூறுகின்றார்கள்.

பெண்கள் சுரண்டலுக்கும் (சமனற்ற ஊதியம், குறைவான ஊதியம்) ஒடுக்கு முறைக்கும் ஆண்மேலாதிக்கத்தின் கீழ் அடக்குமுறைக்கும் (பெண்களுக்கு எதிரான வன்முறை ) பலியாகி இருப்பதால் பிற பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைப் புரிந்து கொள்ளும் நாம்தான் நமது நிலைமைகளையும் சமூக அமைப்பையும் மாற்றுவதற்கான போராட்டத்தை தொடக்கி வைக்க வேண்டும் என்பதையும் புரிந்து கொள்கிறோம்.

சாராம்சத்தில் இன்றைய பெண்நிலைவாதமானது பெண்களின் சமத்துவம், கௌரவத்தை மட்டுமல்ல வீட்டுக்குள்ளும், வீட்டுக்கு வெளியேயும் நமது வாழ்க்கை முறைகளையும், நமது உடல்களையும் நமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திரு ப்பதைத் தெரிவு செய்யும் உரிமையையும் வென்று எடுப்பதற்கான போராட்டமாகும்.

www.tamilarangam.net

பெண்நிலைவாதிகள் பெண்களின் சமத்துவத்தை மட்டுமல்ல ஆண்கள் பெண்கள் இருபாலார்க்கும் நியாயமான பாரபட்சமற்ற ஒரு சமூகத்தை உருவாக்கவே போராடுகிறார்கள்.

**பெண்நிலைவாதம் ஒரு மேலைத்தேயக் கோட்பாடு எனவே அது தென்னாசிய பெண்களுக்கு பொருத்தமற்றது என்பது சரிதானா ?**

இது அபூர்வமாகத்தான் ஒரு கேள்வியாகக் கேட்கப்படுகிறது. மாறாக ஒரு குற்றச்சாட்டாகவும், ஒரு தாக்குதலாகவும், ஒரு பேருண்மையாகவும் கூட முன் வைக்கப்படுகிறது. இதனாலேயே பெண்நிலைவாதிகள் "இயல்பாகவே" கண்டனத்திற்கு உட்பட்டு விதண்டா வாதிகளாக் கருதப்பட்டனர்.

இதில் சுவாரசியமானது என்ன வென்றால் இந்தக் குற்றச்சாட்டை மேற்கத்திய நாகரகத்தை தழுவிய பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஆங்கில மூலம் கல்வி கற்ற ஆங்கிலத்தை மட்டும் பேசும் மேற்கத்திய ஆடைகளை அணியும் ஆண்களே (சில பெண்களும் ) முன் வைக்கிறார்கள்.

மேற்கத்திய நாகரீகத்தின் பரவலால் தோன்றிய நவீன விஞ்ஞானத்தையும் நவீன மயமாக்கலையும் பற்றி இவர்கள் விவாதிப்பதில்லை.

இதே மனிதர்கள் பாராளுமன்றம் மற்றும் சனாதிபதி ஆட்சி முறையின் மேற்கத்தைய தோற்றுவாயை மூலதனத்தின் வளர்ச்சியை நிலவுடமை அமைப்பின் அழிவு மற்றும் தனிச்சொத்துடமையின் தோற்றத்தை இடதுசாரிக் கொள்கைகளை கேள்விக்குட் படுத்துவதில்லை.

பெண்நிலைவாதம் என்ற பதம் தென்னாசியாவில் உருவாகவில்லை என்பது உண்மைதான்.

ஆனால் தொழிற்புரட்சி மார்க்ஸியம் சோசலிசம் இன்னும் சொல்லப் போனால் நமது சில மதங்கள் கூட தென்னாசியாவில் தோன்றவி ல்லையே.

ஐன்ஸ்டீன் லாகூரிலேயும், மார்க்ஸ் கல்கத்தாவிலும், லெனின் டக்காவிலும் பிறக்கவில்லை ஆயினும் அவர்களுடைய மேற்கத்தைய உருத் தோற்றம் அவர்களுடைய கருத்து க்களை அவசியமற்றவையாக்கி விட வில்லை.

ஒரு கருத்தமைவை தேசிய பூகோள எல்லைக்குள் அடக்கி விட முடியாது. பிற மனிதர்களுக்கு அவசியமற்றது என ஒதுக்கி வைக்கவும் முடியாது.

எவ்வாறாயினும் பெண் நிலைவாதம் என்ற பதம் அந்நியமானதாயினும் அதன் கோட்பாடு உருமாற்றத் திற்கான நடவடிக்கையே ஆகும்.

www.tamilarangam.net

இந்நடவடிக்கை தென்னாசியாவில் 19 ஆம் நூற்றாண்டில் பெண்கள் மீது ஏவி விடப்பட்டு இருந்த அடக்கு முறைக்கு எதிராக ஒரு தீர்க்கமான நிலைப்பாட்டோடு அமைப்பு ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது.

எனவே பெண்நிலைவாதம் ஒரு அந்நியக் கருத்தமைவு என்றோ செயற்கையான முறையில் தென்னாசியப் பெண்கள் மீது திணிக்கப்பட்டது என்றோ கூறிவிட முடியாது.

ஆசியாவில் சனநாயக உரிமைகள் பற்றியும் சரிபாதி மக்கள் தொகையினருக்கு அடிப்படை உரிமைகள் வழங்கப்படாது இருந்த நியாயமற்ற நிலை பற்றியும், ஒரு விழிப்புணர்ச்சி தோன்றி வளர்ந்த பொழுதே பெண்நிலைவாதமும் பெண்நிலைவாதப் போராட்டங்களும் எழுச்சியடைந்தன.

முக்கியமாக அரசியல் விழிப்புணர்வு உச்சக் கட்டத்தை அடைந்த குறிப்பிட்ட வரலாற்று கால கட்டங்களில் பெண்நிலைவாத ஆரம்ப காலத்திலும் அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராகவும் உள்நாட்டு சர்வாதிகார நிலப்பிரபுத்துவ ஆட்சியாளருக்கு எதராகவும் போராட்டங்கள் வெடித்து எழுந்த போது பெண்நிலைவாத விழிப்புணர்வும் அடக்குமுறைக்கு எதிரான குரல்கள், விதவைகளின் மறுமணத்திற்கான சாத்தியங்கள், பலதார மணத்தடை செய்தல், 'ஸதி' மற்றும் பர்தா ஒழிப்பு பெண்களுக்குக் கல்வி மற்றும் சட்ட ரீதியான சமத்துவம் போன்ற விடயங்களையுமே வலியுறுத்தின.

( தொடரும் )

## சூரியனைத் தேடி

நிராசைகளால் சூழப்பட்ட எனது ஆன்மா.
வாழ்வுக்காக துடிக்கிறது.
எங்கு நான் திரும்பினும்
ஆதி மனிதனாய்,
சதையைப் பிளந்து இரத்தம் குடிக்கும்
மஞ்சள் பற்களின் அழுக்கு வாய்கள்
எச்சிலை வழிய விட்டபடி,
கோர நகங்களும் குரூரக் கண்களுமாய்.

வென்றுவிட்ட எக்களிப்பில்
கும்மாளமடிக்கும்
மேதாவிலாசங்கள் ஒன்றும் புதியதல்ல.
நட்சத்திரக் கனவுச் சிந்தனைகளில்
சிம்மாசனங்களைத் தேடி,
கால்களை இழந்தாயிற்று,
பௌர்ணமிகள் வருவதாய் பலமுறை ஏமாந்து
சலிப்புத்தான் மிஞ்சியது.

வானிருந்து தேவர்கள் வழங்கும் ஆசிகளை
எண்ணிப் பூரித்த கற்பனைகள்
காலைப்பனியும் உலர்ந்து போனபின். .
கருகிய புற்களாயின.

போரடிக்கும் எருதுகளாய், முடிவில்லாது
எத்தனை நாட்களாய் வளைய வருவது. .
ஆர்ப்பட்டமான கொச்சைத்தனத்துள்
அமிழ்ந்து போவது எவ்வாறு ?

பிரகாசமான பகல் பொழுதுகளைக்
காண்பது சுலபமில்லைத்தான்
ஆனாலும்
மந்தார வானத்துள்ளும்
சூரியனை நான் தேட வேண்டும்.

**செல்வி.**

www.tamilarangam.net

# பெண்களும் பாலியலும்

ANNA RØBNES

கி.முன் கிட்டத்தட்ட 9000 இலேயே எமக்குத் தெரிந்தவகையில் மத்திய கிழக்கில் நதிக்கரை நாகரீகங்கள் ஆரம்பமாகின.

நதிக்கரை நாகரீகங்களின் கலாச்சாரங்களில் பெண் தெய்வமே தலைவியாக இருந்ததோடு ஆண்களின் உதவி எதுவும் இன்றி உயர்/ வாழ்வு உருவாக்கப் படுவதாகவும் நம்பியிருந்தனர்.

பெண்களே நிலத்தைப் முதல் முதலில் படுத்தினர். ஆகவே அவர்கள் நிலத்திற்கு உரிமை உடையவர்களாக இருந்தனர். இவைகள் பெண்களுக்கு பொருளாதார பலத்தையும் சமூக ரீதியான அந்தஸ்தினையும் வழங்கியது.

காலப் போக்கில் மக்கள் தமக்கென வீடுகளை அமைத்து வாழ முற்பட்ட போது குழந்தைகளும் ஆண் பெண் என்ற பால் சம்பந்தமான வாழ்வும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை என்பதைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

உயிரும் ஆண், பெண் என்ற வேறுபட்ட பாலும் வாழ்வும் கடவுளால் வழங்கப்பட்ட மிகப் பெரிசாகக் கருதப்பட்டு வாழ்வு அழகானதாகவும் புனிதத்தன்மை வாய்ந்தாகவும் கருதப்பட்டதோடு கோவிலுடன் தொடர்பு படுத்தப் பட்டது.

கோவில்களில் சில பெண் தெய்வங்கள் Qadesh என்ற பெயரினைப் பெற்றனர். இதன் அர்த்தம் புனிதமானது என்பதாகும். இந்தப் பெண்கள் கோவிலுள்ள ஆண்களுடன் பாலுறவு வைப்பதன் மூலம் கடவுளுக்கு நன்றி செலுத்துவது முறையாகவும் இருந்தது.

பாலியல் உறவுடனான மதச் சடங்கு களில் பங்கு கொள்வதற்காக ஆண்கள் தெரிவு செய்யப்படுவது மரியாதைக்கு உரியதாகக் கருதப்பட்டது. இந்தக் கலாச்சாரங்கள் பால் உறவினை இனிமையானதாகவும் புனிதமானதாகவும் கருதின.

அத்தோடு பாலியல் நடவடிக்கைகள் சம்பந்தமாக மிகச் சில ஒழுக்கவிதிகளே நடைமுறையில் இருந்ததோடு பாலியல் நடவடிக்கைகள் வன்முறையுடனோ, வற்புறுத்தலுடனோ சம்பந்தம் உடையவனவாக இருக்க வில்லை.

ஆனால் பெண்கள் தெய்வங்களாக கருதப்பட்ட சமயங்கள் எல்லாவற்றைப் பற்றியும் இன்று நல்ல முறையில் எழுதப்பட்டோ விபரிக்கப்படவோ இல்லை.

இன்றைய வரலாற்று ஆசிரியர்கள் அவற்றை இன்றைய ஆண்களின் பார்வையில் ' ஒழுக்கவிதிகளின் ' அடிப்படையில் அவற்றை

www.tamilarangam.net

எழுதியுள்ளார்கள்.

ஆசாரம் மிக்க பெண் தெய்வமாகக் கருதப்பட்ட Qadesh விபச்சாரியாக விபரிக்கப்பட்டுள்ளார்.

கி.மு 2500 ஆண்டுகளில் வடக்கிலிருந்த ஆரியர்கள் ஆயுதம் தாங்கியவர்களாகவும் பலம் வாந்த வார்களாகவும் இருந்தனர்.

இவர்களுடைய கலாச்சாரத்தில் ஆண் தெய்வம் தலைவனாகக் கருதப்பட்டது. கடவுள் மலைகளில் வசித்தாகவும் மின்னலுடன் தொடர்புடையதாகவும் கருதப்பட்டது.

ஆரியர்கள் பலமுடையவர்களாக இருந்ததோடு பால் உறவு பற்றியும் குடும்பம் பற்றியும் மிகவும் கடுமையான விதிகளையும் கொண்டிருந்தனர்.

முக்கியமானது யாதெனில் பெண்களுக்கு சமூகத்தில் இருந்த அந்தஸ்து , பொருளாதாரம் முதலியன பறிக்கப்பட்டதோடு ஆரம்பத்தில் பெண்தெய்வங்களை கொண்ட மக்களிடையே இருந்த மிகச் சிறிய வேறுபாடுகள் பெரிது படுத்தப்பட்டது.

வலிமை படைத்தவர்கள் சமூகத்திலும் சமய ரீதியிலும் தலைமைத்துவத்தை எடுத்துக் கொண்டனர்.

இன்னொரு மக்கள் கூட்டத்தில் ஒருவரான யூதர்கள் திருமணம் பற்றியும் நம்பிக்கை பற்றியும் அடிப்படையான சட்ட திட்டங்கள் வேதப் புத்தங்களையும் கொண்டு வந்தனர்.

எளிமையான நடைமுறைகளையும் பால்உறவுப் பழக்கங்களையும் நடைமுறையாகக் கொண்டிருந்த மக்களுக்கு சட்டதிட்டங்களைக் கடைப்பிடிப்பதில் பெருமளவு நாட்டம் ஏற்படாததோடு பல இடங்களில் பெண்தெய்வங்களும் அச் சமூகபழக்க வழக்கங்களும் பல வருடங்களுக்கு நீடித்தது.

**பைபிளும் தேவாலயமும்.**

ஆரம்பித்தில் படைத்தல் கொள்கை பற்றி பலவிதமான கதைகள் இருந்தது என்பது எம் எல்லோருக்கும் தெரிந்ததே.

யூதர்களின் மிகப்பழைய மாயைகளில்(வதந்திகள்) ஒன்றான கடவுள் ஆதாமிற்கு பெண் ஒன்றை தேடுவதற்காக மூன்று சோதனைகளை நடத்தினார் என்றும் அவர்களில் ஒருவர் Lilithஎனும் மனதை வசீகரிக்கும் மந்திர தனைமையுள்ள பெண்ணாவள்.

அதில் மேலும் கூறுவதாவது ஆதாமிற்கும் அப் பெண்ணிற்கும் இடையில் ஒரு போதும் அமைதி நிலவில்லை என்றும் பெண் பல கேள்விகளை எழுப்பியதோடு " நான் ஏன் கீழே படுத்துக் கொள்ள வேண்டும் ? நானும் உன்னைப் போல் படைக்கப்பட்டவள்தானே " என்றும்

www.tamilarangam.net

கூறினாள்.

ஆதாம் அவளை வற்புறுத்தியபோது கோபம் அடைந்த அவள் வலிமை பொருந்திய கடவுளின் பெயரை உச்சரித்து காற்றோடு கலந்து அவனை விட்டு மறைந்து விட்டதாக கூறுகிறது.

கிட்டத்தட்ட கி.மு 800 ல் படைத்தல் கொள்கை பற்றிய உத்தியோக பூர்வமான வரலாறு எழுதப்பட்டது. இந்த பைபிளானது பல வழிகளில் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டும் செயற்கையானதாகவும் பெண் தெய்வங்கள் பற்றிய குறியீடுகள் எதிர்மறையான பார்வையிலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

பெண் தெய்வங்களின் காலத்தில்/ சமயத்தில் அறிவுக்குரிய குறியீடாக இருந்த பாம்பு குறியீடானது பைபிளில் சாத்தானின் ஆயுதமாகக் கூறப்படுகிறது.

அதேபோல் பெண்தெய்வங்களின் சமயத்தில் வாழ்கை பற்றியும் வளம் பற்றியும் குறிக்கும் குறியீடுகள் எதிர்மறையான செயற்பாடுகளாகக் விபரிக்கப்பட்டுள்ளன.

உயிர் உற்பத்தியின் தோற்றுவாய் / வாழ்வின் பிறப்பிடம் என்ற பெண்களின் பாத்திரம் அவர்களிடம் இருந்து பறிக்கப்பட்டதோடு கடவுள் ஆணையே முதலில் படைத்தாகவும் பின்பு அவனுடைய விலா எலும்பிலிருந்து பெண்ணைப் படைத்தாகவும் கூறப்படுகிறது.

அத்தோடு பெண்களின் பாலுறவானது கட்டுப் படுத்தப்பட்டதோடு மிகவும் கடுமையாக கடைப்பிடிப்பதிலும் ஆர்வம் காட்டத் தொடங்கினர்.

இந்த காலப்பகுதியில் தோவாலயத்தில் மிகவும் கச்சிதமாக செய்யப்பட்ட விடயம் யாதெனில் சகலவிதமான பாலியல் அத்துமீறல்களுக்கும் பெண்ணே குற்றவாளி/ காரணமானவள் என்பதாகும்.

பெண்ணே ஆசைகாட்டி ஆணை மயக்குவதாகவும் கூறினார்கள். பாலியல் பலாத்காரத்தின் போது உதவிக்காக குரல் எழுப்பவில்லை எனில் அவள் பாலியல் பலாத்காரத்திற்கு உடன் படுகிறாள் என்றே அர்த்தப் படுத்தப்பட்டது.

இந்த உதவிக்காக எழுப்பும் குரல் / உதவி என்பது மிகவும் குறைவானதே. பெண் கூக்குரல் இட்டு அழுத போதும் அவளுடைய அழுகை ஒலி எவருக்கும் கேட்காதவரை எந்த உதவியும் கிடைக்கப் போவதில்லை.
தேவாலயம் பெண்களிடம் இருந்து தாய்மையையும் கண்ணியத்தையும் எதிர்பார்த்தது.

தேவலாயத்தின் ஆண்களால் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப் பட்டதை வெளியில் கூறினால் அவள் நெருப்பில்

www.tamilarangam.net

எறியப்பட்டாள்.

அதேநேரம் அந்நிகழ்வானது மறைக்கப் பட்டிருந்து பின்பு தெரியவரினும் நெருப்பில் எறியப்பட்டாள்.

இந்த பாலுறவு சம்பந்தமாக வலோத்காரமாகத் திணிக்கப்பட்ட குற்றவுணர்வானது பெண்கள் மத்தியில் ஆழப் பதிந்துள்ளது.
சிறுமிகள், இள பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப் பட்டால் அவர் சிறுமை படுத்தப்படுவது /கேவலப் படுத்தப்படுவது நிலவி வருவதை இன்றும் காணலாம்.

பைபிள் முழுவதுமே பெண்களை இரண்டாம்தர, பெறுமதியற்ற மனிதர்களாகவே எடுத்துக் கூறுகிறது.

அத்தோடு பெண்களின் நிலை எப்போதும் ஆணுக்கு கீழ்பட்டதாகவும் வரையறுக்கிறது. மிகவும் நுணுக்கமான காரணங்களை / வரையறைகளைக் கூறி பெண்களை அசுத்தானவர்கள் எனகூறுகிறது.

யேசு பெண்கள் பற்றி உயர்வான கருத்துக்களைக் கொண்டிருந் ததோடு பெண்களின் விடயங்கள் பற்றி பல இடங்களில் குறிப்பிட்டும் உள்ளார்.

ஆனால் பைபிளில் இப் பகுதிகள் பாவிக்கப்படாமலே விடப்பட்டதோடு பைபிளானது குறுகிய பார்வையில் அர்த்தப்படுத்தப்பட்டு பெண்களை தரக் குறைவான இரண்டாம்தரமான பெறுமதியற்ற மனிதர்களாகவே இன்று பாவனையில் இருக்கிறது.

“ ஸ்திரியானவள் எல்லா நிலையிலும் அடக்கமுடையவளாகவும், அமைதி காப்பவளாகவும் இருந்து யாவற்றைவும் கற்றுக் கொள்வாய் ”

“ஆனால் குருவாக இருக்கவோ ஆண்களுக்கு தலைவியாக இருக்க நான் அனுமதிக்க மாட்டேன்.”

“ பெண் என்பவள் அமைதியாக இருக்க வேண்டும். நல்ல ஒழுக்கமும் தூய்மையும் காப்பவளாக இருக்க வேண்டும் ” இப்படி பலவற்றைக் கூறுகிறது.

**பெண்களின் பாலியலைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்.**

இன்று சமூகத்தில் பெண்கள் ‘ சுதந்திரம் அடைந்தவர்கள்’ என்பதை நாம் கேட்கக் கூடியதாக இருக்கிறது.

திருமணம் என்ற வரையறை இன்றி குழந்தை பெற்றுக் கொண்டால், பாலியல் வதைக்குட்படுத்தப்பட்டால் இன்று பெண்கள் நெருப்பில் எறியப்படுவதில்லை. ஆனால் வேறுபல வழிகளில் பெண்களது பாலியலானது கட்டுப்படுத்தப்பட்டே வருவதைக் காணலாம்.

பெண் குழந்தைகள், இளம்

www.tamilarangam.net

பெண்களுக்கு 'நல்ல பெண்' ஆக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.
ஒருவரையறுக்கப்பட்ட வடிவம்/ உருவம் வழங்கப்பட்டு உண்மையான நிலைமை அழிக்கப்படுகிறது.

அழகான 'நல்ல பெண்' என்ற மாதிரியுள் பெண்ணின் பாலியலும் மிகவும் முக்கிய பங்கினை வகிக்கிறது.

இந்த பாலியல் பாத்திரம் நேரடியாக என்ன என்னவற்றைக் கொண்டிருக்க வேண்டும் என்று எங்கும் எழுதப்பட்டோ வரையறுக்கப்பட்டு இல்லாபோதிலும் பெண் குழந்தைகள் 9-10 வயதினை அடையும் போது பெண்ணின் பாலியல் பற்றியும் பாலியல் பாத்திரம்/ உறவுகள் பற்றிய உள்ளடக்கமானது சிறிது சிறிதாகப் புகட்டப்படுகிறது.

காலப்போக்கில் புகுத்தப்பட்ட இந்தக் கருத்துக்கள் மனதில் பதிந்து பாலியல் பாத்திரம் எவ்வாறு அமையவேண்டும் என்ற படத்தினை மனதில் பதிந்து விடுகிறது.

ஆரம்பத்தில் சிறுமி ஒருத்தி பாலியல் பற்றியும் பாலுறவு பற்றியும் **காதல் நவீனங்களில்** இருந்து அறிய நேரலாம்.

காதல் நவீனங்கள் பலவற்றை வாசித்த பின்பு காதல் வயப்படுதல் பற்றியும் காதல் வயப்படும் பெண்கள் இளைஞனை தெய்வமாகப் பூசிக்க வேண்டும் , அவனது திறமைகளைப் பாராட்ட வேண்டும், அவனது வலிய கரங்கள் அணைக்கும் நாள் பற்றி கனவுகள் காணவேண்டு என்பதோடு பாலியல் சம்பந்தமான எந்த நடவடிக்கைகளிலோ முயற்சிகளிலோ பெண் முதலில் இறங்கக் கூடாது அது ஆண்களின் வேலை போன்றவற்றை அறிகிறாள்.

**சினிமா**விற்கு செல்லும் இளம் பெண் அங்கு பெண்கள் இயக்கம் உள்ளவர்களாகவும், உயிரோட்ட முள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். பெண்கள் கூட்டத்தில் பிரத்தியேகமாக தெரியக் கூடியவாறு எதையாவது கொண்டிருக்க வேண்டும் அதே நேரம் சற்று உறுதியுள்ள பெண்ணாகவும் இருக்க வேண்டும் ஆனால் அந்த உறுதியானது பெண்களுக்குரிய நிலையானதாக இருக்கவேண்டும் என்பதையும் அழகானவர்களாக இருக்க வேண்டும் என்பதையும் அறிகிறாள்.

ஏனெனில் சினிமாவில் அழகான பெண்கள் தானே மிகவும் அழகான காதலர்களைப் பெறுகிறார்கள்.

இளம் சிறுமி, பெண்கள் **விளம்பரபோஸ்டர்**களைப் பார்க்கிறாள். அந்த விளம்பரங்கள் தனியே அழகு மட்டும் போதுமானதல்ல கவர்ச்சியான உள்ளாடைகளையும் அணிந்து செக்ஸியாகக் காட்சியளித்தாலே காதலர்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற எண்ணத்தை ஊட்டுகிறது.

www.tamilarangam.net

அழகு என்பது பற்றி பல கருத்தமைவுகள் இளம் பெண்கள் மத்தியில் பரப்பப் படுகிறது.

மெலிந்த வாகான உடலமைப்பு, வசீகரமான கண்கள், பார்க்கையில் ஓர் இன்ப உணர்வை ஏற்படுத்தக் கூடியதாக அமைய வேண்டும்.

உடல் சற்றுப் பருத்திருந்தால் அவ் உடலமைப்பானது வெளியில் காட்டுவதற்கு அசிங்கமானது என்ற கருத்தும் பரப்பப் படுகிறது.

இதனால் பெண்களில் பெரும்பாலாவர்கள் மெல்லிய உடலமைப்பினையே விரும்பு கின்றனர். இவ்வாறான ஓர் சூழலில் வளர்ந்துவரும் பெண் பாலுறவு பற்றியும் அறிய நேர்கிறது.

அதேநேரம் பாலுறவு கொள்வது சம்பந்தமாக மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகிறது.

ஒரு பெண்ணுக்கு பல ஆண் நண்பர்கள் இருக்கக் கூடாது. அப்படி இருப்பின் அவள் 'ஆட்டக்காரி' என முத்திரை குத்தப்படுவதோடு சமூகத்தில் மதிப்பழந்தவளாகக் கருதப்படுகிறாள்.

அதேவேளை ஆண்களுக்கு பல பெண் நண்பிகள் இருக்கலாம் ஆண்கள் பற்றி கதைப்பதற்கு யாரும் இல்லை சமூகம் இது பற்றி அலட்டிக் கொள்வதில்லை.

பெண் செக்ஸ் பற்றி ஆர்வம் அற்றவளாகவோ, சமுகமாக பழகும் ஆர்வம் அற்றவளாகவோ இருகக்கூடாது அதே நேரம் செக்ஸ் பற்றி ஆர்வம் உடையவளாக வெளியில் காட்டிக் கொள்ளவும் கூடாது என சமூகம் எதிர்பார்க்கிறது.

**50க்களில் பெண்கள் பார்வை.**

**'நல்ல பெண்'**என்ற மாதிரியானது ஆண்டுகளில் மாற்றமடைந்து வந்த போதிலும் பாலியல் சம்பந்தமான கருத்துக்கள் யாவும் அதே தன்மையுடையனவாகவே இருக்கின்றன.

இன்றுவரை பெண்களது பாலியல் ஒழுக்கம் நடத்தை என்பன வளர்ப்பில் இருந்தே வளருகிறது.

70க்களில் பெண்கள் போராட்டங்கள் மூலம் உரிமைகளை வென்றெடுத்த போதும் பாலியல் ஒழுக்கம் பற்றிய கருத்துக்களும் 50, 60 களில் இருந்தவையே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

1955 இல் நோர்வேஜிய கலாச்சார வெளியீட்டினால் வெளியிடப்பட்ட 300 க்கு பக்கங்களைக் கொண்ட யெர்மனிய நாட்டு Elizabeth Schuler எழுதிய 'Den full komne Eva' என்ற புத்தகத்தில் உடலின் ஒவ்வொரு பகுதியையும் எவ்வாறு அழகு படுத்துவது

www.tamilarangam.net

என்றும் நவீன பெண் தன்னை எவ்வாறு அழகு படுத்திக் கொள்ள வேண்டும் என்பதையும் பிரத்தியேகமாக ஆண்களுடன் பழகுவதற்கு, ஆண்களின் முன்னிலையில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் விளக்குகிறது.

'நல்ல பெண்' என்ற மாதிரி பற்றி இன்றைய பெண்களுக்கு எதையும் நேரடியாகக் கூறாதபோதிலும் அக் கருத்துக்கள் மிகவும் அழகாக மெருகூட்டப்பட்டு வடிவ மைக்கப்பட்டு கூறப்பட்டுள்ளன.

**ஆண்களின் பார்வையில் பெண்கள்.**

பெண்களின் பார்வையில் பெண்கள் பற்றிய அபிபப்பராயம் எண்ணங்கள் ஆண்களின் பார்வை, அபிப்பிராயம் என்பவற்றிலிருந்தும் மிகுந்த வேறுபாடுகளை உடையவை.

ஆண்கள் பெண்கள் பற்றிய ஓர் கற்பனையான வடிவத்தினை மனதில் உருவாக்கிக் கொள்வதோடு தான் கனவு காணும் இயல்புககளைக் பெண் கொண்டிருக்க வேண்டும் எனவும் விரும்புகிறான்.

திருமண வரையறையில் மிகவும் பொருத்தமான மனைவி வேண்டும் என விரும்புகிறான். மனைவியானவள் தனக்கு பாதுகாப்பு, அன்பு, அரவணைப்பு வழங்குபவளாகவும், குடும்ப வாழ்வு அமைதியானதாகவும் இருக்க வேண்டும் எனவும் விரும்புகிறான்.

இந்த எதிர்பார்ப்புக்கள் பற்றி அறியும் பெண்கள் அவ் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்ய முயலுவதோடு அவைகளுக்காக தம்மை மாற்றிக் கொள்ளவும் முயல்கின்றனர்.

பொதுவாக ஆண்களில் பெரும்பாலானவர்கள் தனக்கு கிடைக்கும் பெண் ஏனைய பெண்களை விட வசீகரமானவளாக அழகானவளாக புத்திக் கூர்மை உடையவளாக இருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர்.

அவனுடைய கனவுகளை நிறைவு பெறுகின்ற அதே வேளை மற்றவர்களுடைய பார்வையிலும் மேற்குறிப்பிட்ட குணாம்சங்கள் கொண்டவளாக அவள் தென்பட வேண்டும் .

பெண் அழகானவளாக இருக்கவேண்டும். ஆனால் மிகப் பெரிய அழகியாக இருக்கவேண்டும் என்பதில்லை.

பெரும்பாலான ஆண்கள் மத்தியில் முழுமையான அழகு பற்றிய பயம் கலந்த உணர்வே காணப்படுகிறது.

ஒரு பெண் வசீகரமான அழகான கவரக் கூடிய உடலமைப்பைக் கொண்டிருப்பதோடு பிரகாசமான கண்கள், அழகான கூந்தல் , கட்டான

www.tamilarangam.net

உடலமைப்பு கொண்டிருப்பதோடு ரசிக்கத்தக்க நவீன பாணியிலான உடைகளை அணிந்தவளாகவும் அழகிய கரங்களைக் கொண்டவளாகவும் இருக்க வேண்டும்.

அவளது **make up**அழகு அவளுடைய அழகிற்கு அழகு சேர்ப்பதாக அமைய வேண்டுமே தவிர மிகையாக இருக்கக் கூடாது. அவளும் அவளது வெளித்தோற்றமும் மட்டுமல்லாது புத்திக் கூர்மை உடையதாக அவளது செயற்பாடுகள் அமைந்திருக்க வேண்டும்.

தன்னுடைய பொழுது போக்குகள் பற்றி ஒரு ஆண் கூறுகையில் ஆர்வமுடன் செவி மடுக்காத பெண்கள் மீது அவன் அதிகளவு அக்கறை/ விருப்பம் காண்பிப்பதில்லை.

ஆண்கள் பெண்களிடமிருந்து எதிர்பார்ப்பது பெண்மையும் மென்மையையும். இதன் அர்த்தம் மனதைத் தொடக் கூடியவளாகவும் உள்ளத்தை உருக வைப்பவளாகவும் இருக்கவேண்டும் என்பதல்ல.

ஆண்கள் மத்தியில் பெண்கள் உதவியற்றவர்கள் அத்தோடு அவர்களுக்கு பாதுகாப்புத் தேவை என்ற கருத்து நிலவுகிறது.

ஒரு ஆணின் தனக்கு விருப்பமான பெண் தனக்கு உரியவளாக இருக்க வேண்டும். ஆணின் உரையாடலில் அடிக்கடி குறுக்கிடும் பெண் பற்றி நல்ல அபிப்பிராம் ஏற்படுவது குறைவு. குறுக்கிடும் ஒவ்வொரு தடவையும் அவன் நம்பிக்கை இழப்பதுடன் அவள் பற்றிய தவறான அபிப்பிரயத்தையும் வந்தடைகிறான்.

தனது கணவனது நன் மதிப்பைப் பெற விரும்பும் பெண் ' ஒரு ஆண் தான் கூற விரும்புவதைக் கூறுகிறான். பெண் தான் எதைக் கூறுவதை கணவன் விரும்புவான் என்பதையே வெளியில் கூறுகிறாள்' என்ற பழமொழியை மனதில் பதித்துக் கொள்ள வேண்டும். போன்றவைகள் தான் எமது பெற்றோர்கள், அவர்களது பெற்றோர்கள் வாழ்ந்த, வளர்ந் நிலைமைகள் ஆகும்.

40 வயதை அண்மித்த பெண்களுக்கு / ஓரளவு வயது வந்தவர்களது கருத்துக்களை மாற்றுவது சற்றுக் கடினமானதே.

நான் எவ்வாறு இருக்க வேண்டும். என்பதையும் எனது வெளித்தோற்றம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் நான் தான் முடிவு செய்ய வேண்டும் .

ஏனெனில் சமூகத்தில் சமூகத்தால் வழங்கப்படும் வரையறைகளுக்குள் பெண் தன்னை மற்றிக் கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு சமூகத்தில் இன்றும் நிலவுகிறது.

www.tamilarangam.net

**இன்றைய இளம் பெண்ணிலைவாதிகள்**

எங்களுடைய பாலியல் பாத்திரமானது எந்த நேரமும் எக்காலத்திலும் எதிர் கொள்ள வேண்டிய/முகம் கொடுக்க வேண்டிய ஒன்றாகவே அமைந்துள்ளது.

எப்போதும் எமது கருத்துக்களுடனும், எமது கருத்துக் களுக்கு எதிரான கருத்துக்களுடனும் முட்டி மோதிக்க கொண்டே இருக்க வேண்டும்.

இந்த சமூகம் எதிர்பார்கும் ' நல்ல பெண்' என்ற பெயர் எனக்குத் தேவையில்லை என மிக இலகுவாகக் கூறிவிடவோ எனது பாலியல் பற்றி நானே முடிவு செய்து கொள்வேன் என்று கூறவோ முடியாத நிலையில் பல பெண்கள் இன்று இருக்கின்றனர்.

ஏனெனில் இந்த சமூகத்தால் வரையறுக்கப்பட்ட வரையறை களுக்குள் பெண்கள் இருக்க வேண்டும் என பெரும்பாலானோர் எதிர்பார்ப்பதோடு இந்த வரையறைகளை மீற முனையும் பெண்கள் மீது காழ்புணர்வுடனும் அநுகூலையயுடனும் நடந்து கொள்கின்றனர்.

தீவிரமான கொள்கையுடைய பெண்கள் மிகவும் சிக்கலான நிலையை வந்தடைகின்றனர்.

இவர்கள் சமூகத்தில் பெண்களின் நிலைமை பற்றியும், சமூகம் எவ்வாறு இயங்குகிறது என்பதையும் ஆதாரங்களுடன் கூற முனைகின்றனர்.

அத்துடன் பெண்களின் நிலை பெண்களின் விடயங்கள் பற்றிய விவாதங்கள் , கலந்துரையாடல்கள், கூட்டங்கள், கருத்தரங்குகள் போன்றவற்றை பாடசாலைகள், பல் கலைக்கழகங்கள், வேலை செய்யும் இடங்கள், நண்பர்கள் மத்தியிலும் நிலைமைகளை விளங்க வைக்கும் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர்.

இவர்கள் தற்போதைய சமூகம் எதிர்பார்க்கும் அழகு பற்றியும், நல்ல பெண் என்ற பாத்திரம் பற்றி கொண்டிருக்கும் கருத்துக்களுடன் உடன்படவில்லை.

**பெண்களின் பாலுறுப்பு**

பெண்களின் ஒவ்வொரு அசைவும் மிகவும் உன்னிப்பாக அவதானிக்கப்படும் சூழலில் பெண்களால் தமது உடல் பற்றியும் பாலியல் பற்றியும் ஆரோக்கியமாக சிந்திக்க இயலாமல் பல தடைகள் ஏற்படுகின்றன.

பெண்களின் பால் உறுப்பினது பெயரானது எமது மொழியில் **மிகவும் அசிங்கமான** சொல்லாகப் பயன்படுத்தப் படுகிறது.

www.tamilarangam.net

டனிஸ் செய்தி இதழான BØrn og Unge வில் வெளியான ஓர் கட்டுரையில் இரு ஆய்வாளர்கள் குழந்தைகளுடன் பாலியல் பற்றிய உரையாடலின் மூலம் பெண் குழந்தைகள் பால் உறுப்பிற்கு எந்த ஒரு பெயரையும் கூறவில்லை எனவும் அதேநேரம் பால் உறுப்பிற்கான உயரியல் பதத்தினை பாவிப்பதாகவும் கண்டறிந்துள்ளனர்.

இதற்கு மாறாக ஆண் குழந்தைகள் ஆண்களின் பாலுறுப்பிற்கு பல கசலப் பெயர்கள் இட்டுள்ளதோடு இப் பெயர்கள் பெண்ணின் பால் உறுப்பிற்கான பெயரைப் போன்று அசிங்கமான சொல்லாகவோ இல்லை எனவும் கூறுகின்றனர்.

மொழியில் பயன் படுத்தப்படும் பாகுபாடானது பெண்குழந்தைகள் பால் உறுப்பு பற்றி கதைப்பதற்கு வெட்கப்படுவதற்கு காரணமாகும்.

பால் உறுப்பானது உயிர் உற்பத்தியின் முக்கிய பகுதியாகும். பெண்களின் உடலின் முக்கிய பகுதியானது இன்று வரை இழிவான சொல்லாகவே பாவிக்கப்பட்டு வருகிறது.

பெண்களில் பலர் தமது உடல் பற்றியோ உடல் உறுப்புக்களின் செயற்பாடுகள் பற்றியோ சரியான போதுமான அளவு தகவல்களை அறியாதவர்களாகவும், தெரியாதவர்களாகவுமே இருக்கிறார்கள்.

பெண்களுக்கு பாலியல் சம்பந்தமான விடயங்கள் யாவும் விலக்கப்பட்ட வையாகவே இருக்கின்ற அதேவேளை ஆண்களுக்கு வழமையான மிகச் சாதாரண விடயமாக இருக்கின்றன.

பாலுறவு பற்றியும், அந்த உணர்வு பற்றியும், தேவை பற்றியும் கதைக்கவே பல பெண்கள் பயப்படு கிறவர்களாகவே இருக்கின்றனர்.

செக்ஸ் என்பது இரு மனிதர்களிடையே பகிர்ந்து கொள்ளக் கூடிய மிகவும் ரம்மியமான உணர்வு. இரு மனிதர்கள் ஒருவரை ஒருவர் மிகவும் நெருக்கமாக அந்நியோன்யமான முறையில் புரிந்து கொள்ள உதவும் மிகப் பிரத்தியேகமானது உறவாகும்.

பாலியல் சுதந்திரம் என்பது எந்த பெண்ணும் எந்த ஆணுடனும் எப்போது வேண்டுமானாலும் பாலுறவு கொள்ளலாம் என்ற அர்த்தத்தில் அமைந்தல்ல.

பாலுறவு கொள்வது ன்பது இயற்கையானது. எல்லா மனிதர்களுக்கும் தேவையானது.

மனிதர்களிடையே நெருக்கத்தையும் இன்ப, சுதந்திரமான உணர்வினையும் இனிமையான அநுவபவத்தினையும் வழங்குவது பாலுறவாகும்.

□□□□ □□□ □□.

www.tamilarangam.net

# அதிகரிக்கும் கொந்தளிப்பின் ஒரே காரணத்தால்

□□□□□□□□□□□□ □□□□ □□

நமது வர்க்கப் போராட்டத்தின் நகரங்களில்
அதில் அதிகரிக்கும் கொந்தளிப்பின் ஒரே காரணத்தினால்
நம்மில் சிலர் இப்போது தீர்மானித்து விட்டனர்
கடற்புற நகரங்கள், கூரைகளின் மீது பனி, பெண்கள்,
நிலத்தடி சேமிப்பறைகளில் பழுத்த ஆப்பிள்களின் வாசனை,
சதையின் உணர்ச்சிகள், ஒரு மனிதனை முழுமையாகவும்
மனிதனாகவும் ஆக்கும் எல்லாவற்றையும் பற்றி
இனி பேசப் போவதில்லை என.
ஆனால் இனி வரும் காலங்களில் கொந்தளிப்பை பற்றி மட்டுமே
பேசுவதென்று.
அதனால் ஒரு பரிமாணமாகி, குறுக்கப்பட்டு,
வறண்ட , அழகற்ற இயங்கியல் பொருளாதாரத்தின் சொற்களிலும்
அரசியல் வேலையிலும் சிக்கிப் போய்
அதனால்
பனி வீழ்வுகள் ( அவை வெறும் கடுங் குளிர் மட்டுல்ல, நாம் அறிவோம் )
இந்தச் சகிக்க முடியாத, நெருக்கப்பட்ட கூட்டு வாழ்வு
சுரண்டல், சபலத்திற்குள்ளான சதை, வர்க்க நீதி யாவும்
அவ்வளவு பன்முகம் கொண்டதொரு உலகின் ஒப்புதலைப்
பெறக் காரணமாய் இருக்கக் கூடாது ;
இவ்வளவு ரத்தக்கறை படிந்த ஒரு வாழ்வின் முரண்களில் திளைக்கக் கூடாது ,
புரிகிறா உனக்கு.

நன்றி. Poems of Bertolt Brecht.

□□□□□□□□□□□□□□□□□□□□

www.tamilarangam.net

வாசகர்களுக்கு „

அன்புடன்.

உங்கள் அனைவரிடமிருந்து ஆக்கங்களையும் விமர்சனங்களை மிகவும் ஆவவோடு எதிர்பார்க்கிறோம். அத்தோடு சந்தாக்களை புதுப்பித்துக் கொள்ளவும் கேட்டுக் கொள்கிறோம்.

சந்தா விபரம்

| | |
|---|---|
| ஸ்கண்டிநேவிய நாடுகள் | . Nkr. |
| ஏனைய நாடுகள் | . U$ 20 |
| இலங்கை | . இலவசம் |

தபாற்கணக்கிலக்கம் .0824 038 3676

முகவரி.

SAKTI
BOKS 99 oppsal
0619 OSlO 6
NORWAY.

TAMILSK KVINNE TIDSSKRIFT

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்